[illegible]

5

8-6-1933

[illegible]

33-5-11

208-206



# மாத்வமித்திரன்.



# The Madhwa Mitran.


Editor, Bhagavatha Ranganathachariar,
KUMBAKONAM.

பௌர்ணமிதோறும் வெளிவரும்.






| Vol. 5 | ஸ்ரீமுக ஸம்வத்ஸரம் | No 11 |
| --- | --- | --- |
| புஸ்தகம் 5 | ஜ்யேஷ்ட மாஸம் பௌர்ணமி (8—6—33.) | நெ 11 |





பொருளடக்கம்.



| நெ. | | பக்கம் |
| --- | --- | --- |
| 1. | பதார்த்தங்களின் ஸாராஸார விவேகம். | 313 |
| 2. | துளஸியின் மஹிமை. | 315 |
| 3. | தலவகார உபநிஷத். | 317 |
| 4. | ஜயதீர்த்தாதிகள் தேவாம்சமே. | 319 |
| 5. | மணிமஞ்ஜரி (ஸ்ரீ நாராயணபண்டிதாசாரியார்) | 325 |
| 6. | விசேஷதினங்கள். | 332 |
| 7. | ஸ்ரீ தாத்பர்ய நிர்ணயம் (ஸ்ரீமத்வாசாரியார்) | 333 |
| 8. | சந்தாதாரர்களுக்கு விக்ஞாபனம். | 337 |
| 9. | செய்தித்திரட்டு. | 339 |
| 10 | பீமசேன விஜயம் (ஸ்ரீமான் ஆத்யம் பாகவத ரங்கநாதாசாரியார்) | 342 |




ஆசிரியர்

பாகவத ரங்கநாதாசாரியார்.

## மாத்வமித்திரன் பிரசுரங்கள்,

**ஸ்ரீராகவேந்திரஸ்வாமிகளின் சரித்திரம்:**—எந்த பாஷையிலுமே இதுவரை இம்மாதிரி விரிவாய் வெளியானதில்லை. ஸ்ரீராகவேந்திரர் செய்து காட்டிய திடுக்கிடும்படியான அநேக அரிய சம்பவங்கள் விஸ்தாரமாய் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. இதைப் படித்துக்கொண்டிருக்கும்பொழுதே ஸ்ரீராகவேந்திர குருஸ்வாமியிடம் சித்தம் பதிந்து பக்தி வளர்ந்து ஆனந்தக்கண்ணீர் பெருகி சரீரம் ரோமாஞ்சமாவதை ப்ரத்யக்ஷமாய் காண்போர் பலர். மேலும் பாலர், விருத்தர்வரை மாத்வர்கள் யாவராலும் தினம் உச்சரிக்கப்படும் ஸ்ரீராகவேந்திரஸ்தோத்திரம், சுலோகங்கள் தேவநாகரத்திலும், தமிழிலும் அவைகளின் தமிழ் அர்த்தமும் சேர்க்கப்பட்டிருக்கிறது. ஏராளமாய் செலவடைந்து வருகிறபடியால் பிரதி ஏமாறாதிருக்க தற்போது ஆர்டர் செய்யுங்கள். விலை அணா 0—8—0 தபாற் கூலி அணா 0—1—0.

**ஸ்ரீராகவேந்திர ஸ்தோத்திரம்:**— தேவநாகரத்திலும், தமிழிலும் சுலோகங்கள் அவைகளின் தமிழ் அர்த்தமும் விலை அணா 2. தபாற்கூலி 0—0—6.

**ஸ்ரீவாயுஸ்துதி:**—தேவநாகரத்தில் சுலோகங்களும் அவைகளின் தமிழ் அர்த்தமும் சேர்க்கப்பட்டிருக்கிறது. வாயுஸ்துதியின் இன்னின்ன ச்லோகங்களால் இன்னின்ன பலம் ஏற்படுமென்பதும் புனஸ்சரண விதானமும் காட்டப்பட்டிருக்கிறது. விலை அணா 0—5—0 தபாற்கூலி அணா ஒன்று.

**த்வைதமத விளக்கம்:**—ஸ்ரீமத்வமதத்தின் அநேக ப்ரமேயங்கள், ஸ்ரீமத்வாசாரியாரின் ஜீவியசரித்திரம் முதலியவை உள்ளது விலை அணா 2. தபாற்கூலி பைசா 6.

**கும்பகோண மகாத்மியம்:**—(தமிழ்) அணா 4. தபாற்கூலி பை 6.

**துருவசரித்திர நாடகம்:**— அணா 6. தபாற்கூலி அணா 0—1—0.

**கீதாதத்வம்:**— ஸ்ரீஉத்தராதிமடம் ஸ்வாமிகள் இயற்றி ஸ்ரீமான் ஆத்யம் பாகவதரங்கநாதாசாரியாரால் தமிழில் எழுதப்பட்டது. முதல் மூன்று சஞ்சிகைகள் சுமார் 225 பக்கங்கள் தற்போது தயார். இதர சஞ்சிகைகள் அவை வெளியானவுடன் இனாமாய் புக்போஸ்ட்டில் அனுப்பப்படும். விலை 1—8—0 தபாற்கூலி 0—6—0. ஒரு ரூபாய்க்கு குறைந்து ஆர்டர் செய்கிறவர்கள் தபாற்கூலியைச் சேர்த்து கிரயத்தை போஸ்டேஜ் ஸ்டாம்பாய் அனுப்பவேண்டும். **Certificate of Posting** பேரில் புஸ்தகங்கள் அனுப்பப்படும். புஸ்தகங்கள் கிடைக்காவிட்டால் இந்த ஆபீசு ஜவாப்தாரியல்ல.

**மானேஜர் மாத்வமித்திரன், ஸ்ரீவியாஸவிலாஸம், கும்பகோணம்.**

ஸ்ரீ லக்ஷ்மீநரஸிம்ஹாய நம:

# மாத்வமித்திரன்.

श्रीमन्मध्वमते हरिः परतरः, सत्यं जगत् , तत्वतः भेदः,
जीवगणाः हरेरनुचराः, नीचोच्चभावं गताः ॥
मुक्तिः नैजसुखानुभूतिः, अमला भक्तिश्च तत्साधनं,
ह्यक्षादित्रितयं प्रमाणमखिलाम्नायैकवेद्यो हरिः ॥

## பதார்த்தங்களின் ஸாராஸார விவேகம்.

பகவான் ஸ்ரீஹரி ஸர்வஸார போக்தா எனப்படுவார். என்றால் எல்லா பதார்த்தங்களின் ஸாரத்தை மட்டில் புஜிப்பவரேயன்றி எல்லாபதார்த்தங்களையும் புஜிப்பவரன்று. வாயுபகவானும் அப்படியேத்தான். ஆகவே பதார்த்தங்களின் ஸாரமெது அஸாரமெது என்பது அறிவிக்கப்படுகிறது. இதை அறியாமல் அஸாரமானவைகளை ஸாரமென்றறிந்து பகவானுக்குநிவேதனம் செய்யப்பட்டால் பகவான் அதை புஜிப்பதில்லை. மனுஷ்யர்கள் போஜனம் செய்தால் அது கலி முதலானவர்களுக்கு திருப்தி உண்டுபண்ணுகிறது. வைச்வதேவமில்லாமல் போஜனம் செய்தால் அஸாரமானதை புஜித்தவர்களாவார்கள். அடியிற்கண்ட பதார்த்தங்கள் பகவன் நிவேதனத்திற்கு யோக்கியமானவைகளாயிருப்பினும் சில ஸந்தர்ப்பங்களில் அஸாரமானவைகளாகின்றன. திராட்சைப்பழத்தில் புழுக்கள் தென்பட்டுவிட்டால் அது அஸாரம். மனதிற்கு பிடித்தமில்லாமற்போனாலும் அஸாரமே. வாழைப்பழம் நான்கு நாளுக்கு மேற்பட்டாலும் அதிகமாய் பழுத்துப்போனாலும் அஸாரம். எலந்தைப்பழமும் அப்படியேத்தான். பலாப்பழம் ஒரு மாதத்திற்கு மேற்பட்டும், பேரிச்சங்காய் ஆறுமாதத்திற்குமேற்பட்டும், தேங்காய் உடைத்து ஓர் பகல் இரவுக்கு மேற்பட்டும், அஸாரம். ஒருயாமத்திற்கு பிறகுஅன்னம், பருப்பு, பாயஸம், பக்ஷணம், அஸாரம். எண்ணெயில் பக்வமானவைகளும் காய்கறிகளும் மூன்று

யாமமானல் அஸாரமானவை எலுமிச்சை, மாங்காய்,நெல்லிக்காய், இஞ்சி முதலான காய்கள் ஒரு வருஷம் கழிந்தால் அஸாரம். அப்பளாம் 15-நாளுக்குமேல் பட்டால் அஸாரம். துளசி எப்பொழுதும் ஏகாதசியிலும் அதுபசையாயிருந்தாலும் உலர்ந்திருந்தாலும் ஸாரமே. ஏகாதசியன்று துளசியின் ஸாரத்தை முகர்ந்து க்ரஹிக்கவேண்டும். வாயில்போட்டுக்கொண்டு நாவால் ருசிக்கலாகாது. ஏகாதசியன்று ஸ்ரீஹரிக்கு அன்னம் அஸாரம். அன்று ஹரியின் பாதோதகதீர்த்தம் மனுஷ்யர்களுக்கு ஒருதடவையானல் ஸாரம். அதற்கு மேற்பட்டால் அஸாரம். ஏகாதசியன்று கந்தோதகத்துடனுள்ள தீர்த்தம்,பால்,தயிர், நெய், தேன் முதலியவை ஹரிக்கு அஸாரம்.ஆஷாடமாஸத்தில் கறிகாய்களும், பாத்ரபதத்தில் தயிரும், ஆச்வீஜ மாதத்தில் பாலும், கார்த்திகை மாஸத்தில் துவரம்பருப்பு முதலிய பருப்பு தினுசுகளும்,அஸாரம். துளசிமணியை தரிக்காத சரீரமும் நெல்லிக்காய் இல்லாத சமையலும், ஊர்த்வபுண்டரம் தப்தமுத்திரை தரிக்காத ஸ்திரீயும், ஹரிபக்தி இல்லாத மானிடஜன்மமும் ஹரிநாமமில்லாத நாக்கும், ஹரிநைவேத்யமில்லாத சமையலும் அஸாரம். சவந்திபுஷ்பம் (அதஸீபுஷ்பம்) மூன்று நாளுக்குமேற்பட்டும், மல்லிகைப்பூ ஓர் நாழிகைக்கு மேற்பட்டும், ஜாதிப்பூ அரை நாழிகைக்கு மேற்பட்டும், தாமரைப்பூ மூன்று யாமத்திற்கு மேற்பட்டும், கரவீரம் ஓர் இரவும் பகலும், பாரிஜாதம் ஓர் நாழிகைக்கு மேற்பட்டும் அஸாரம். குங்குமப்பூ மூன்று வருஷமும் கஸ்தூரி 10-வருஷமும், கர்பூரம் ஒரு வருஷமும்தான் ஸாரம். பிறகு அஸாரம். சந்தனம் எப்பொழுதும் ஸாரம். மத்யம், உமி, புண்ணாக்கு, கருகிய சாதம், சொரக்காய், பொடலங்காய் தினுசு, கத்தரிக்காய், முருங்கக்காய், பில்வம், அத்திக்காய், வெங்காயம், உள்ளிப்பூண்டு, கஞ்சா முதலியவைகள் எப்பொழும் அஸாரமானவைகள். ஏகாதசியன்று வைச்வதேவம், சிரார்த்தம், தர்பணம், மந்திரத்தால் சவத்தைதகனம் செய்வது, அஸாரமாகும். ஜீவர்கள் இந்த அஸாரமான பதார்த்தங்களை உட்கொள்வது அவர்களின் பூர்வ கர்மத்தின் பலன்தான். இவைகளை போஜனம் செய்பவர்கள் அதமக்யமானவர்களே. கலி முதலிய அஸுரர்கள் இவைகளை போஜனம் செய்கின்றனர். ஆகவே இவைகளை உட்கொள்வதும் பகவானுக்கு நிவேதனம் செய்வதும் தகாது.

# துளஸி மகிமை

துளசிக்கு ஸமமாய் ஸ்ரீஹரிக்கு ப்ரியமானது யாதொன்றுமில்லை. ஆதலால் துளசியுடனில்லாதிருந்தால் அந்த பூஜை நிஷ்பலமாகும். துளசி கிடைக்காவிடில் அதன் உலர்ந்த குச்சியையாவது நிர்மால்ய விஸர்ஜனமான பின்பு பக்தியுடன் 'ஸமர்ப்பிக்கவேண்டுமென்கிறது ப்ராம்ம புராணம். குங்குமப்பூ, கஸ்தூரி இவைகளைவிட துளசிதான் எனக்கு ப்ரியமானது. துளசி காஷ்டமுமகப்படாமற்போனல் துளசியின் நாமாவையாவது சொல்லவேண்டும். தர்பம், எள்ளு அகப்படாமற்போனல் துளசியை வைத்துக்கொண்டு செய்தால் பலனுண்டென்றறிவிக்கிறது பாத்மபுராணம். துளசி காஷ்டம் போட்டு எரியும் நெருப்பில் ஹோமம் செய்தால் ப்ரயாகத்தில் ப்ரேதத்தை தகனம் செய்தால் எப்படியோ அம்மாதிரி பத்து மடக்கு பலனதிகம். துளசிவனத்தின் ஸம்பந்தம் கங்காஸ்நானத்தின் ஸம்பந்தம்போலாகும். துளசியின் தரிசினம் மனுஷ்யர்களுக்கு ஸர்வதீர்த்தங்களில் ஸ்நானம் செய்த பலனைத்தரும் என்கிறது விஷ்ணுபுராணம். விசேஷமாக என்னுடைய (ஸ்ரீஹரியுடைய) மந்திரங்களை துளசி காஷ்டத்தால் செய்த ஜபமாலையைக்கொண்டு ஜபம் செய்தால் பத்துமடங்கு பலனுண்டு. த்வாதசி, ஸங்கிரமணகாலம், சந்திரகிரஹணம், சூரியகிரஹணம், ஞாயிற்றுக்கிழமை, வெள்ளிக்கிழமை இவைகளில் துளசிதளத்தை எடுக்கலாகாதென்கிறது சிவபுராணம். மூண்டாசுகட்டிக்கொண்டாவது, காலில் பாதரக்ஷை போட்டுக்கொண்டாவது அசுத்தமாகவாவதிருந்து துளசிதளம் எடுக்கக்கூடாது. அப்படி எடுத்தால் நரகமே வந்துசேரும். நிஷித்தமான நாட்கள் ஏற்பட்டால் தொங்கிப்போன தளத்தைத்தான் எடுக்கவேண்டும். அதனுல்தான் பூஜை செய்யவேண்டும். துளசியில்லாமல் பூஜை செய்யலாகாது என்கிறது லிங்கபுராணம். துளசி தளம் லக்ஷமோ கோடியோ தானே எடுத்துதான் பூஜை செய்யவேண்டும். நிரந்தரம் ஆயிரம் தளம் எடுத்து பூஜை செய்தால் பூர்ண பலனுண்டாகும். வேறு புஷ்ப ஜாதிகள் ஆயிரமிருந்தாலும் நிஷ்பலமே. எல்லா புஷ்பங்களிலேயும் துளசி உத்தமோத்தமமானதென்கிறது கருடபுராணம். இதரர்கள் கொண்டுவந்த புஷ்பங்களாலோ துளசியாலோ பூஜை செய்தால் அவனுக்கு பாதி பலன்தான். தானே துளசி கொண்டுவந்து ஸஹஸ்ர நாமங்களால் ஸ்ரீஹரியை எப்போதும் அர்ச்சித்தால் அவனுக்கு ஸாம்ராஜ்யமே கிடைக்குமென்கிறது நாரதீய புராணம். பகவானுடைய சிரஸில் எவ்வளவு துளசி

தளங்கள் இருக்குமோ அர்ச்சித்தவன் அவ்வளவு ஆயிரம் வருடங்கள் வசிப்பான், துளசியை ஸ்மரித்து ஸ்ரீஹரியை அதனால் பூஜிப்பவன் சாசுவதமான வைகுண்டத்தை அடைவான் என்கிறது ஆக்னேய புராணம். விஷ்ணு, துளசி, கங்கை இவர்களின் ஸ்மரணையை எப்போதும் செய்யவேண்டியது. கலியுகத்தில் வேறு கதியில்லை, இல்லை, இல்லை. அப்படி செய்கிறவன் என்னைப்போல் ரூபமுள்ளவனாய் சங்குசக்ரதாரியாய் முக்தர்களுடன் விளங்குவான். அவனுக்கு புனரா விருத்தி இல்லை என்கிறது ஸ்காந்த புராணம். துளசி ஹரி இவைகளின் நாமமே மனுஷ்யர்களுக்கு ஞான பக்தியைத்தரக்கூடியது. துளசியை எப்போதும் ஸ்மரித்தால் அது புண்யத்தைக்கொடுக்கிறது. பாபத்தைத் தொலைக்கிறது. ஸஹஸ்ரநாமம் சொல்லி துளசி அர்ச்சனம் செய்தால் அவனுடைய புண்யபலனை யார் சொல்லமுடியுமென்கிறது பவிஷ்ய புராணம். விஷ்ணு ஸஹஸ்ர நாமங்களைச் சொல்லி துளசியின் கோமளமான தளங்களால் பக்தியுடன் நந்தனின் மகனான ஸ்ரீகிருஷ்ணனை தினம் பூஜித்தாலும், தினம் கீதாபாராயணம் செய்தாலும் விஷ்ணு ஸாயுஜ்யம் வரும் என்கிறது ப்ரம்மவைவர்த்த புராணம். யாருடைய கழுத்தில் துளசி மாலையும், யாருடைய கையில் பவித்ரமும், யாருடைய நாவில் ஸ்ரீஹரி நாமமுமிருக்கிறதோ அவனை கலி பாதிப்பதில்லை, துளசி பூஜையையும் துளசி ஸ்மரணையையும் செய்யவேண்டியது. துளசிவனத்தின் நடுவிலிருந்தால் யமதூதர்களின் பயமேதென்கிறது மார்க்கண்டேய புராணம். எதனுடைய மூலத்தில் எல்லா தீர்த்தங்களும் எதன் நடுவில் எல்லா தேவதைகளும் எதன் நுணியில் எல்லா வேதங்களுமிருக்கின்றனவோ அந்த துளசியை நமஸ்கரிக்கிறேன். துளசிக்காடும், கமலக்காடும், வைஷ்ணவர்களுமெங்கு இருக்கின்றனரோ அங்கு ஸ்ரீஹரியின் ஸான்னித்யமுண்டு என்கிறது வாமன புராணம். ஸ்ரீவராஹமூர்த்தியை துளசியால் பக்தியுடன் பூஜிக்கவேண்டும். வராஹனையும் துளசியையும் த்யானம் செய்தால் பூமியில் புனர்ஜனனமில்லை. யார் துளசியை உபயோகிக்காமல் பகவத்பூஜை செய்கிறானோ அந்த துர்புத்தி பிடித்தவன் ஒரு மன்வந்தரம்வரை நரகத்தை அடைகிறான் என்கிறது வராஹபுராணம். ஸ்ரீசக்ரபாணியின் பாதங்களில் யார் துளசி தளங்களை ஸமர்ப்பிக்கிறானோ அவன் கோடி குலங்களுடன் விஷ்ணுலோகத்தில் பெருமையடைவான். த்ரிகாலங்களிலும் துளசியில்லாமல் பூஜை செய்கிறவன் இரத்தம் நிறைந்த நரகங்களில் தன் ஏழு குலங்களையும் தள்ளுகிறான் என்கிறது மத்ஸ்ய புராணம். துளசிக் கட்டையைத் தேய்த்து அந்த சந்தனத்தை கடுகளவு பகவானுக்கு ஒருவன் ஸமர்ப்பித்தால் அவன் கோடி ஜன்மங்களில் செய்த பாபம் அக்ஷணமே நசித்துப்போகிறது. கரு அகில் சந்தனம் துளசிகாஷ்ட சந்தனங்களுடன் சேர்த்துதான் ஸ்ரீகந்தத்தை பகவானுக்கு ஸமர்ப்பிக்கவேண்டுமென்கிறது கூர்மபுராணம். (தொடரும்.)

12 JUN 1933
MADRAS

# தலவகார உபநிஷத்.

## முதல் கண்டம்.

அநந்தகுண பூர்ணத்வாத் அகம்யாய ஸதாபிரபி|
ஸர்வேஷ்டதாத்ரே தேவாநாம் நமோ நாராயணாயதே||

என்று ஸ்ரீபகவத்பாதாள் இந்த உபநிஷத் பாஷியத்தின் துவக்கத்தில் மங்களாசரணம் செய்திருக்கிறார். அந்தரிக்ஷலோகத்திலுள்ள வைஜயந்தமென்ற பிரம்ம ஸபையில் ஏகாந்தமாய் உட்கார்ந்திருந்த சதுர்முகனை பரமசிவன்கண்டு விஷ்ணுவின் தத்துவஞானத்தை அவர் அறிந்திருந்தபோதிலும் அதை விசேஷமாய் அறிந்துகொள்ளவோ அல்லது தான் அறிந்துகொண்டதை உறுதிப்படுத்திக்கொள்ளவோ அல்லது ஜனங்களை அனுக்ரஹிப்பதற்காகவோ அதைப்பற்றி சம்பாஷிக்க இச்சைக்கொண்டு ஸர்வேந்திரிய ப்ரேரகரான சதுர்முகனை அடியிற்கண்டவாறு ப்ரச்னம் செய்தார். இந்த உபநிஷத் சதுர்முகனுக்கும் பரமசிவனுக்கும் ஸம்பாஷணை ரூபமாதலால் இந்த உபநிஷத்திற்கு ப்ரம்மாவும்சிவனும் ரிஷிகளாவார்கள். ப்ரம்மசப்தத்தால் சொல்லப்படும் விஷ்ணு இந்த உபநிஷத்துக்கு தேவதையாவார். அக்ஷர எண்ணிக்கைப்படி த்ரிஷ்டுப் முதலான சந்தஸ்ஸுகளை ஆங்காங்கு நிஷ்கரிஷித்து தெரிந்துகொள்ளவேண்டும். (1) நல்லதோ கெட்டதோ இஷ்டமான விஷயத்தைக்குறித்து மனஸ் யாரால் ப்ரேபிக்கப்பட்டு செல்கிறது. மனம் தானாகவே செல்வதில்லை. அது ஓர் இந்திரியமாயிருப்பதால் அதை ஒரு கர்த்தா உபயோகப்படுத்தவேண்டும். மனதை அடக்கியும் விஷயங்களைக் குறித்து அது ஓடுவதால் ஜீவன் அதற்கு ப்ரேரகனென்று சொல்வதற்கில்லை. ஆகையால் ஜீவனைவிட பலவானான ஓர் தெய்வத்தால் அதுப்ரேரிபிக்கப்படவேண்டும். அந்த தெய்வம் எது? மனஸ்ஸின் ப்ரேரகர் ஸர்வஜீவோத்தமமான முக்ய ப்ராணராயிருக்கலாமென்றால் அவர் யாரால் ப்ரேரிபிக்கப்பட்டு தன் காரியத்தைச்செய்கிறாரென்று கேட்கிறேன். அவருக்கு என்னைப்போன்ற ஜீவன் ப்ரேரகனாயிருப்பதற்கில்லை. அவர் ஸர்வஜீவோத்தமன். நீர் அவருக்கு ஸமமானவராதலால் நீரும் ப்ரேரகரா

யிருக்கமுடியாது. லக்ஷ்மீதேவியாரும் பரதந்திரராயிருப்பதால் அவளும் முக்ய ப்ரேரகராயிருப்பதற்கில்லை. ஆதலால் முக்ய ப்ரேரகர் யாரென்று கேட்கிறேன். லௌகிகமானதோ வைதிகமானதோ வார்த்தையை யாரால் ப்ரேரிபிக்கப்பட்டதை ஜனங்கள்பேசுகிறார்கள். ப்ராணிகளின் அவயங்களான கண் காது முதலியவைகளை ஹே ப்ரம்மாவே! யார் ப்ரேரிபிக்கிறார். வாக்கு முதலியவைகள் ஜீவனுக்கு அதீனமாயில்லாதிருப்பதால் யாராவது அவைகளுக்கு நியாயமகனுயிருக்கவேண்டும். மனம் முதலியவைகளுக்கு ப்ரேரகர் நாராயணராயிருக்கும்பக்ஷத்தில் அவருடைய லக்ஷணம் யாது? மனஸ் வாக்கு முதலியவைகள் என்றால் அவைகளின் அபிமானிதேவர்களைக் குறிப்பிட்டதாயாகும். ஆகவே முக்ய ப்ராணருக்கும் ப்ரேரகர் யாரென்று கேட்கப்பட்டது. (2) இப்படி பரமசிவன் கேட்கவும் ப்ரம்மா நாராயணரை த்யானம் செய்து ப்ரம்மா பதில் சொல்லுகிறார். ச்ரோத்திரியந்திரியத்துக்கு சிரவணம் செய்யும்சக்தியைக் கொடுத்திருக்கிறவரும் மனதிற்கு,மனனம் செய்யும் சக்தியைக்கொடுத்திருக்கிறவரும், வாக் இந்திரியத்துக்கு வாக்கை உச்சரிக்கும் சக்தியைத்தருகிறவரும் முக்ய ப்ராணருக்கு ப்ராணத்வத்தைத் தருகிறவரும், சக்ஷுரிந்திரியத்துக்கு பார்க்கும் சக்தியைத் தருகிறவரும், இதர இந்திரியங்களுக்கு சுவைகளின் சக்தியைத் தருகிறவரும் யாரென்று நீர் கேட்டவர் என் த்யானத்துக்கு விஷயமாயுள்ள அந்தநாராயணர்தான். இப்படி ச்ரோத்ராதி இந்திரியங்களுக்கு ப்ரேரகர் அந்த விஷ்ணுதானென்றறிந்தவர்களுக்கு ஏற்படும் பலன் யாதெனில் ஞானிகள் மேற்கண்டபடி நாராயணனை அபரோக்ஷம் செய்துகொண்டு அவர்களின் கடைசி சரீரத்தினின்றும் வெளியேறி லிங்க சரீரபந்தத்தை நீக்கிக்கொண்டு முக்தர்களாகின்றனர். (3) அந்த நாராயணர் ச்ரோத்ராதிகளுக்கு நியாமகராயிருந்தால் அவர் எந்த லக்ஷணமுள்ளவர் என்றால் அவர் ஸம்பூர்ணமாய் எந்த தேவர்களாலும் அறியப்படமுடியாதவரென்ற லக்ஷணங்கொண்டவரென்று சொல்லப்படுகிறது. சக்ஷுஸ்ஸுக்கு அபிமானி தேவதையான சூரியன் அந்த நாராயணருடைய விஷயத்தில் ஸம்பூர்ணமாய் அறியமாட்டான். அப்படியே ச்ரோத்ராதி இந்திரியங்களின் அபிமானி தேவர்களும் அறியமாட்டார்கள். வாக்குக்கு அபிமானி தேவதையும் அறியமாட்டான். (தொடரும்.)

# ஜயதீர்த்தாதிகள் தேவாம்சமே

(முன் தொடர்ச்சி.)

(8)

ஆங்காங்குள்ள சில ஸம்ஸ்கிருத வாக்யங்களை மனப்பாடம் செய்து கிராமபோன் பிளேட்டுகளைப்போல் திருப்பிச் திருப்பிச் சொல்லி லௌகிகர்களிடமிருந்து பணத்தைப்பறிக்கும் சில யாசகர்களை ஸாமானியர்கள் பண்டிதர்களென்று பிரமிப்பதுண்டு திமிர்பிடித்த இந்த இரு "பண்டிதர்களின்" வாதம் ஓர் நாஸ்திகனுடைய வாதமாகவேத்தோன்றுகிறதே ஒழிய கல்வியால் ஏற்படவேண்டிய ஹரி குருபக்தி, தெய்வபயம், விநயம் முதலான குணங்களைக்கொண்டதாய் தெரியவில்லை. ஏதோ ஸர்வக்ஞர்களாய் எண்ணிக்கொண்டு இவர்கள் பிதற்றியிருக்கின்றனர். கலியில் ப்ரத்யக்ஷமாய் தீனர்களுக்கு அருள்புரிந்துவரும் ஸ்ரீராகவேந்திரர் ஸ்ரீ ரகூத்தமர் முதலான பிருந்தாவனஸ்த யதீசுவரர்களை எல்லாம் பிசாசுகளாயிருப்பதாய்ச்சொன்ன இந்த இரண்டு பிசாசங்களுக்கு எமது ஸமூகத்தில் இடங்கொடாமல் ஆங்காங்குள்ள மடாதிபதிகளுக்கும் பிரபலஸ்தர்களுக்குமிதைத்தெரிவித்து அவர்களுக்கு எமது ஸமூகத்தாரால் எவ்வித ஆதரணையுமில்லாமல் செய்யவேண்டியது எமதுகடமை என்றேதோன்றுகிறது. ப்ளேக், காலரா, பெரியம்மை முதலியவைகளை இரகசியமாய் வைத்துக்கொண்டால் எப்படியோ அப்படியே இவர்களை இரகசியமாய் வைத்துக்கொண்டால் சமூகவாழ்க்கைக்கே பெரும் கேடு உண்டாகும். பெரியோர்களை தூஷிக்கும் இந்த அஸுரர்கள் மாரீசனைப்போல் வைதிக வேடம் தரித்து மத்வசாஸ்திர ஸித்தங்களை வெளியில் சொல்லிக்கொண்டு உலகத்தாரை மோசம் செய்துவந்தாலும் இவர்களின் உள்ளத்தில் உண்மையாய் குருபக்தி இருந்திருந்தால் இவ்வாறு அவர்கள் சொல்லியிருக்கமாட்டார்கள். அவர்களின்னுறென்றும் விளங்கவில்லை. இம்மாயக்காரர்கள் சமூகத்தாரின் துவேஷம் ஏற்பட்டுவிட்டதே என்று பயந்து சிறிதுகாலத்திற்கு பின்பு வெளிவரலாம். இந்த வார்த்தைகளுக்கு சற்றும் எமது சாஸ்திரங்களில் ஆதாரமில்லையென்பதை என் ஆசாரியாரின் உதவியைக்கொண்டு அடுத்த நிரூபத்தில் காட்டுகிறேன்,

கோயமுத்தூர், நாரா[illegible]ண ராவ்.

(9)

## இப்பத்திரிகையின் அபிப்பிராயம்.

இது ஸம்பந்தமாய் வரும் பற்பல கடிதங்களை இன்னமும் சிறிது காலம் பிரசுரித்துக்கொண்டு உன்மதத்தார்களான அந்த இரண்டு

ஆசாரியார்களின் கடுமொழிகளை எமது மித்திரனின் வாசகர்களான ஹரி குருபக்தி மிகுந்தவர்களின் ஞாபகத்திற்குக் கொண்டுவந்து அவர்களின் மனது துடிதுடிக்கும்படி விடுவது யுக்தமல்லவென்று தோன்றுவதாலும், எமது அநேக நிரூபர்களின் ஆக்ஷேபணைகளுக்கு பதிலளிக்க அவர்களுக்கு போதுமான ஸாவகாசம் கொடுத்தும் அவர்கள் அதற்கு முன்வராமல் தைரியம் குலைந்து லோக நிந்தனைக்கு பயந்து இருண்ட இருட்டையே ஆசிரயமாகக்கொண்டுவிட்டதாய் எண்ண இடமிருப்பதாலும், இத்துடன் இந்த விஷயத்தை முடிக்கிறோம். ஸ்ரீ குரு ராகவேந்திரரை தன் தந்தையாகவும் தாயாகவும் குருவாயும் பந்துவாகவும் இம்மித்திரனின் பத்திராதிபர் கருதுவதை அந்த இரண்டு ஆசாரியர்களறிந்தும் கடுமொழிகளால் ஸ்ரீ ராகவேந்திரரையும் ஸ்ரீ ஜயதீர்த்தாதி எல்லா குருமார்களையும் மற்றும் பக்தகோஷ்டிகளான தாஸர்மார்களையும் திருப்பதியில் நேரிலும் அநேகர் முன்பும் தாக்கிப்பேசி அவருடைய மனதிற்கு மிகுந்த சங்கடத்தை உண்டுபண்ணியதுமன்றி தங்கள் வாதத்திற்கு பலமான பிரமாணங்களிருப்பதாய் மிக்க ஆரவாரம் செய்ததன் நிமித்தம் அவர்களின் வாதம் மாத்வ உலகத்தாரால் எவ்வளவு இழிவாய் கருதப்படுகிறதென்பதை அறிவிக்கவும், அவர்களின் வாதத்திற்கு எவ்வளவு மட்டில் ஆதாரமிருக்கிறதென்பதை அவர்கள் அறிந்துகொள்ளவும், இந்த வாதம் பஹிரங்கமாய் விவாதிக்கப்பட ஸந்தர்ப்பத்தை ஏற்படுத்திக்கொடுக்கவும், இந்த வாதம் உபாயமாய் ஆரம்பத்தில் அவர்களின் சிஷ்யர்களின் இடையிலும் பிறகு காளடையில் பகிரங்கமாயும் பிரசாரமடையாமலிருக்கவும், இந்த ஆக்ஷேபணைகள் பிரசுரிக்கப்பட்டதேயன்றி பற்பல தத்வ விசாரங்கள் நிறைந்த புனிதமான இம்மித்திரனின் பக்கங்களை குருத்வேஷத்தை வளர்த்தும் இந்த நிரூபத்தால் பாழாக்கப் பிரசுரிக்கப்பட்டதன்று. ஜகதீசுவரனின் ஸமஸ்த கல்யாண குணங்களைப் பாழாக்கும் அத்வைதிகளின் துர்வாதம் எமது புனிதமான ஸ்ரீ மத்வசாஸ்திர கிரந்தங்களில் வெளியாகி பகிரங்கமாய் கண்டிக்கப்படவில்லையா? ஆக்ஷேபணைகள் வெளியான மாத்திரத்தில் மகா பாபமென்று கண்களையும், காதுகளையும் பொத்திக்கொண்டுவிட்டால் அந்த ஆக்ஷேபணைகளுக்கு பதில் சொல்லி விஷயவிசாரம் நடந்து நிர்ணயம் ஏற்படுவதெப்படி? ஓர் விஷயத்தை எடுத்துச் சொல்லும்பொழுது அவைகளின் மீது எத்தனைவகை ஆக்ஷேபணைகள் ஏற்படக்கூடுமோ அவ்வளவு ஆக்ஷேபணைகளையும் தாங்களே கிளப்பி அவைகளுக்கெல்லாம் ஸமாதானம் சொல்லி தாம் சொன்னது சரி என்றே முடிவு செய்வது எமது சாஸ்திரங்களின் விவாத ரீதியாகும். இந்த ரீதியை சாஸ்திராப்யாஸம் செய்யும் ஒவ்வொருவரும் நன்கறிவார்.



இனி விஷயவிசாரம் செய்வோம். இந்திராதிகள் கலியுகத்தில் பிறப்பதில்லை என்று ஸ்ரீ பகவத்பாதாள் சொல்வதால் ஜயதீர்த்தர் இந்திராம்சமென்று ஸ்ரீ வியாஸதீர்த்தர் சொன்னது தவறென்றும் அவருடைய நூலை குப்பைத்தொட்டியில் போடவேண்டுமென்றும் இவர்கள் சொல்லியிருக்கின்றனர். ஸ்ரீ பகவத்பாதாள் தாத்பரிய நிர்ணயம் 32-வது அத்யாயம் 132-வது சுலோகத்தில் "விஷ்ணு பாரார்ஜுனாத்யா: க்ருதேப்ராஜாதா:ஹரிதோஷணாய" என்று சொல்லியிருப்பதாய் அச்சான பிரதிகள் காட்டுகின்றன. அதற்கு ப்ரஸித்தமான வ்யாக்யானமாயுள்ள ஜநார்த்தன பட்டீயத்திலும் "க்ருதே ஏகோனத்ரிம்சத் க்ருதயுகே" என்று அர்த்தம் செய்யப்பட்டிருக்கிறது. இதனால் தற்போது நடந்துவரும் இருபத்தி எட்டாவது கலியுகத்தில் அர்ஜுனாதிகளுக்கு பூமியில் பிறப்பில்லை என்றும் இதற்கடுத்த இருபத்தி ஒன்பதாவது க்ருதயுகத்தில் அர்ஜுனாதிகள் பிறக்கின்றனரென்றும் ஸ்ரீ பகவத்பாதாள் கூறியிருப்பதாய் அர்த்தமேற்படுகிறது. ஆகவே இந்த சுலோகத்திலுள்ள க்ருதே என்ற பதம் இந்த வாதத்திற்கடிப்படையாகும். மகாபாரத தாத்பர்ய நிர்ணயம் சில ஏட்டுப்பிரதிகளில் இந்த சுலோகத்தில் கலௌப்ராஜாதா: என்று காணப்படுகிறது. தஞ்சாவூர் ஸரஸ்வதி மகால் பப்ளிக் லைப்ரெரியிலும் மற்றும் இப்பத்திராதிபரின் க்ருஹத்திலும் ஸ்ரீமான் காபே வாஸுதேவ தீக்ஷிதரின் க்ருகத்திலும் கலௌப்ராஜாதா என்ற பாடமுள்ள புஸ்தகங்கள் காணப்படுகின்றன. ஸ்ரீ பகவத்பாதாள் தம்முடைய அவதாரத்திற்கு ஆதாரமாய் ஸூசித்திருக்கும் சுமார் 62 ரிக்மந்திரங்களுக்கு வாயு பகவானின் அவதாரபரமாய் வர்ணம், ஸ்வரம், சந்தஸ் முதலியவைகளின் ஸ்வாரஸ்யங்களுடன் வித்யாரண்யரின் அர்த்தகண்டனபூர்வமாய் வெகு சிலாக்யமாய் வ்யாக்யானம் செய்திருக்கும் ப்ராசீனரான மத்வ மந்திரார்த்த மஞ்ஜரீ கிரந்தகர்த்தாவும் அவருடைய நூலில் கலௌப்ராஜாதா: என்ற பாடத்தைக்கொண்ட சுலோகத்தையே உதாஹரித்திருக்கிறார். மேலும் இதைச்சொல்லவந்த சந்தர்பத்தை யோசித்தாலும் கலௌப்ராஜாதாஎன்ற பாடமே பொருத்தமாகத்தோன்றுகிறது. மகாபாரதத்தின் கடைசி பர்வமான ஸ்வர்க்காரோஹண பர்வத்தின் கதையை ஸ்ரீ பகவத்பாதாள் 32-வது அத்யாயத்தில் சொல்லி முடித்துவிட்டு துரியோதனாதிகள் இந்த இருபத்தி எட்டாவது கலியில் நாலாயிரத்து முன்னூறு வருஷம்வரை தேவலோகத்தின் போகங்களை அனுபவித்த பிறகு அந்த அஸுரர்களில் சிலர் அஸுரர்களாகவும் சிலர் பிசாசுகளாகவும் சிலர் ராக்ஷஸர்களாகவும் பலர் மனுஷ்யர்களாகவும் பூமியில் பிறந்து நானே ஈசுவரன் இந்த ஜகத் பொய் என்று மித்யா ஞானம் படைத்தவர்களாய்

அவ்வாறு தங்கள் கிரந்தங்களால் ஹரிதத்வத்தை மறைத்து விஷ்ணு வைஷ்ணவத்வேஷம் செய்து அந்தம் தமஸ்ஸை அடைகின்றனரென்று பிரஸ்தாபம் செய்தார். அதன் பிறகு கலியில் நாலாயிரத்து முன்னூறு வருடத்திற்கு பிறகு துரியோதனாதி தைத்யர்களை பங்கப்படுத்தியவரான பஞ்சபாண்டவர்களிலொருவரான பீமசேனரே பிராம்மணராய் மீண்டும் பூமியில் பிறந்து அந்த கலி முதலான அஸுரர்களால் மறைக்கப்பட்டிருந்த விஷ்ணுஸ்வரூபத்தை வெளியாக்கி ஹரிபக்தர்களுக்குபதேசம் செய்தாரென்றும் அப்பொழுது த்ரௌபதியான பாரதி தேவியும் இக்கலியில் பிறக்கப்போவதாயும் சொல்ல பீமசேனர் த்ரௌபதி இவர்களைத் தவிர்த்து மற்ற அர்ஜுனாதி பாண்டவர்கள் பிறக்கப்போவதில்லையோ என்றால் பகவத்பக்தர்களான அர்ஜுனாதி மற்ற பாண்டவர்களும் பகவத்பக்தியின்பொருட்டு கலியில் பிறக்கப்போவதாயும் இந்த சுலோகத்தில் அறிவித்திருக்கிறார். கலியுகத்தில் விஷ்ணு வைஷ்ணவத்வேஷத்தைச் செய்யும் துரியோதனாதிகளை நிக்ரஹிக்க கலியுகத்திலேயே பீமஸேனர் த்ரௌபதி இவர்கள் பிறக்கின்றனரென்று சொல்லி அர்ஜுனாதி இதர பாண்டவர்கள் பிறப்பெடுக்கவில்லையோ என்ற சங்கைக்கு மற்ற பாண்டவர்களும் கலியுகத்தில் பிறக்கின்றனரென்று சொல்வது பொருந்துமேயல்லாது இக்கலியை விட்டு, பீமசேனர் த்ரௌபதி இவர்களை விட்டு அடுத்த கிருதயுகத்தில் தனித்து ஸ்வதந்திரமாய் பகவத்ஸேவை செய்ய அர்ஜுனாதிகள் பிறக்கின்றனரென்று சொல்வது பொருந்தாதென்பது வாசகர்களுக்கே நன்கு விளங்கும்.

மேலும் பாண்டவர்கள் த்வாபரயுகத்தில் பிறந்து ஐகமத்யமாய் பகவத்ஸேவை செய்து ஆனந்தப்பட்டுக்கொண்டிருந்ததுபோல் கலியிலும் இவர்கள் பிறந்து ஒரே அபிப்பிராயத்துடன் ஒத்துழைத்து பகவத்ஸேவைசெய்து ஆனந்தப்பட்டுவிட்டு ஸ்வர்க்கம்போய் அங்கு ஆனந்தமாயிருந்து முக்தியடைவதாய் மகாபாரதமும் அறிவிக்கிறது. மகாபாரதம் சாந்தி பர்வம் மோக்ஷதர்மத்தில் விருத்ரகீதையில் பீஷ்மாசாரியார் விருத்ராசுரன் ஸத்கதியை அடைந்த வகையைக் கூறவும், தர்மபுத்திரர் தான் சொந்த ஜனங்களைக்கொன்றதால் தனக்கு என்ன பாபம் நேரிட்டு எந்த கதி நேரப்போகிறதோவென்று பயந்துபோய் பாட்டனாரே! "யுதிஷ்டிர உவாச| வயம் து பிருசமாபன்னா: ரக்தா: கஷ்டா: ஸுகே அஸுகே| காம் கதிம் ப்ரதிபத்ஸ்யாமோ நீலாம் கிருஷ்ணாதமமாமத' சுக்லவர்ணமுள்ள ஸத்ய தேவதைக்கு திர்யக்ஜன்மம் நரகம் இவைகளில்லாமல் மீண்டும் ஸம்ஸாரத்தில் திரும்புதலில்லை என்றும் மஞ்சள் வர்ணம் சிகப்பு வர்ணமுள்ள ஜீவன் தாமஸ கர்மங்களுடன் திர்யக் ஜன்மம் அடைவானென்றும் நீங்கள் சொன்னீர்கள். நாங்களோ சுகம் துக்கம் இவைகளில் கஷ்டப்பட்டுவருகிறோம். சிகப்பு வர்ணத்துடனிருக்கிறோம். நாங்கள் இனி நீலமான மனுஷ்ய ஜன்மத்தை அடைவோமா அல்லது அதைவிடத் தாழ்ந்ததான கிருஷ்ண வர்ணமுள்ள திர்யக் ஜன்மத்தை அடைவோமா என்று ப்ரச்னம் செய்தார். அதற்கு பீஷ்மாசாரியார் நீங்கள் ஸ்ரீ ஹரியின் ஆக்ஞைப்படி யுத்தம் செய்தது பகவத்பூஜாரூபமானதால் "பீஷ்ம உவாச| சுத்தாபிஜன ஸம்பன்னா: பாண்டவா: சம்சிதவ்ரதா:| விஹ்ருத்ய தேவலோகேஷு புன: மானுஷ்யமேஷ்யத|| ப்ரஜாவி ஸர்கம் ச ஸுகேன லோகே ப்ரேத்யான்ய தேஹேஷு ஸுகானி புக்த்வா| ஸுகேன ஸம்யாஸ்யத சித்தஸங்க்யம் மாவோ பயம் பவது நவோஸ்து பாபம்" சுத்த வம்சத்தில் பிறந்தவர்களாய் கொண்டாடக்கூடிய விரதங்களைக்கொண்ட பாண்டவர்களே! நீங்கள் இந்த ஜன்மம் விட்டு நேராக தேவலோகம் போய் அங்கு ஸ்வர்க்கானுபவம் செய்துவிட்டு மறுபடியும் பூலோகத்தில் மனுஷ்ய ஜன்மாவை அடையப்போகிறீர்கள். பிரம்மகல்பம்வரை இம்மாதிரி சுகமாய் அவதரித்துக்கொண்டு ஸுகானுபவம் செய்து பிறகு சிரமமில்லாமலே முக்தகோஷ்டியில் சேரப்போகிறீர்கள். ஆகவே பாண்டவர்களே! உங்களுக்கு மோக்ஷமில்லை என்ற பயம் வேண்டாம். உங்களுக்கு பாபமில்லை. என்று ஸ்பஷ்டமாய் சொல்லியிருக்கிறார். இந்த வாக்யங்கள் அச்சான எல்லா மகாபாரதப் பதிப்புகளிலும்கூட காணப்படுகின்றன. பாண்டவர்களே! நீங்கள் பிறக்கப்போகிறீர்களென்று எல்லோரையும் சேர்த்து சொல்லப்பட்டிருக்கிறதேயன்றி த்ரௌபதி பீமசேனர் வேறாகவும் அர்ஜுனாதிகள் வேறாகவும் சொல்லப்படவில்லை. மகாபாரத சுலோகத்தில் காணப்படும் புன: மானுஷ்யமேஷ்யத என்ற வாக்யத்தைத்தாம் ஆதாரமாய் எடுத்துக்கொண்டதாயறிவிக்கவே ஸ்ரீபகவத்பாதாள் கலௌ பிருதிவ்யாம்|| ஜாத: புன: விப்ரதனுஸ்ஸபீம: என்று சொன்னதாய் நிச்சயிக்கலாம். இந்த ப்ரகரணத்தை ஸ்ரீபகவத்பாதாள் விமரிசைக்குக் கொண்டுவந்தாரென்பதில் ஸம்சயமில்லை. ஏனெனில் அவர் 136-வது சுலோகத்தில் "பிருஷ்டஸ்சபீஷ்மோத்ர யுதிஷ்டிரேண தன்மோக்ஷ தர்மேஷ்வபி கிஞ்சிதாஹ" தர்மபுத்திரர் கேட்டதற்கு பீஷ்மாசாரியார் மோக்ஷதர்மத்தில் இந்த அவதாரத்தைப்பற்றி சூக்ஷ்மமாய்ச்சொல்லியிருக்கிறாரென்று இந்த சந்தர்ப்பத்தை சூசித்திருக்கிறார். தவிரவும் கலியில் பீமசேனரின் அவதாரமாகப்போகிறதென்பதற்கு இந்த சுலோகத்தை ஸ்ரீபகவத்பாதாள் பிராமாணமாய் காட்டியிருப்பதைக்கொண்டு பாண்ட-

வர்கள் மீண்டும் பிறக்கப்போவதாய் பீஷ்மர் சொன்னது கலியிலில்தா னென்பது நிச்சயமாகிறது. ஆகவே அர்ஜுனாதி மற்ற பாண்டவர்கள் கலியுகத்தில் பிறக்கப்போவதில்லை என்றுவது கிருதயுகத்தில்தான் பிறக்கின்றனரென்றுவது ஸ்ரீபகவத்பாதாள் சொன்னதாய் எண்ண அவகாசமில்லை. கிருதே என்ற பாடம் விப்ரதிபன்னமாய் போனதால் பிரமாணமாகாது.

கலியுகத்தில் பிறந்த பீமசேனரின் அவதாரமான ஸ்ரீமத்வாசாரியாருடன் தேவோத்தமர்கள் நேரிலும் ரூபாந்தரங்களாலும் பழகிக் கொண்டிருந்ததாய் எண்ணிறைந்த ப்ரமாணங்கள் காணப்படுகின்றன. பலித்தாஸூக்தத்தில் "ஈசானுஸ: சவஸாக்ரந்த ஸூரய:" பரமசிவனும் மற்றும் ஞானிகளான தேவோத்தமர்களும் போதஸ்வரூபரான ஸ்ரீ மத்வாசாரியாரிடமிருந்து பகவத் குணங்களை சுகமாய் சிரவணம் செய்தனரென்று சொல்லப்படுகிறது. அப்படியே ரிக்வேதம் எட்டாவது அஷ்டகம் முதல் அத்யாயத்திலுள்ள "தாம்ஸூ தேகீர்த்தி மகவா" என்ற ஸூக்தத்தில் "பிருஹதுக்யாத் அவாசி" என்று பிரம்மமீமாம்ஸா சாஸ்திரத்தை வாணீபதியான ஸ்ரீமத்வாசாரியாரிடமிருந்து தேவோத்தமர்கள் படித்தனரென்று சொல்லப்படுகிறது. ஸ்ரீமத்வவிஜயத்திலும் "ப்ரசுராந்தர ப்ரவசனம் பணிராடு பசுச்ருவான் ஸஸனகாதிமுனி:" ஸநகாதிமுனிவர்களுடன் ஆதிசேஷன் ஸ்ரீபகவத்பாதாளின் பாடப்ரவசனத்தை எல்லோற் கண்ணிற்கு படும்படி நின்று சிரவணம் செய்ததாய் சொல்லப்பட்டிருக்கிறது. ப்ரம்மபுராணம் வெங்கடாசல மகாத்மியம் 3-வது அத்யாயத்தில் "யதிரூபோமாதரிச்வா அஷ்டாவிம்சதிமே கலௌ| அவதீர்ய வஸத்யத்ர மத்வநாமா வரம் விபோ:| அவாப தபஸாம் புண்யம் ப்ரீத்யா சாகஸ்த்ய யோகின:| தத்ஸ்தாபிதாலயே புண்யே சாதுர் மாஸ்யம் ச கரிஷ்யதி| சுக: ச்ரோஷ்யதி ஸச்சாஸ்திரம் பத்மதீர்த்தாதி யோகின:" 28-வது கலியில் வாயுபகவான் மத்வாசாரியாரென்று அவதரித்து அகஸ்தியரின் கட்டைப்பெற்று மகா தவம்செய்து ஸ்ரீவெங்கடேசனின் வரனைப்பெற்று ஸூவர்ணமுகரீதீரத்திலுள்ள ப்ரம்மசிலை ப்ராந்தியத்தில் சாதுர்மாஸ்யமுட்கார்ந்து பாடப்ரவசனம் செய்ய சுகாசாரியாரும் பத்மதீர்த்தாதி யோகிகளும் ஸத்சாஸ்திர சிரவணம் செய்கின்றனரென்று சொல்லப்பட்டிருக்கிறது. இப்படியேத்தான் கூர்ம புராணம் ஸ்ரீமுஷ்ணமகாத்மியம் 5-வது அத்யாயத்திலும் "ஸ்தாபயிஷ்யதி ஸத்தர்மான் ஸத்சாஸ்திரம் வ்யாகரிஷ்யதி|ச்ரோஷ்யந்தி முனயஸ்ஸர்வே சுகாத்யா தேவரூபிண:' என்று சுகாதிகளும் தேவாதிகளும் ஸ்ரீமத்வாசாரியாரிடமிருந்து ஸத்சாஸ்திர சிரவணம் செய்வதாய் சொல்லப்பட்டிருக்கிறது. ஹிருஷீகேசக்ஷேத்திரத்தில் ப்ராம்மணரூபியாய் பரமசிவன் வந்து ஸ்ரீமத்வாசாரியாரை சாப்பிட அழைத்ததாய் விப்ராத்மேச: க்ஷேத்ரம் என்ற சுலோகத்தால் ஸ்ரீமத்வ விஜயம் கூறுகிறது.

இதன் தொடர்ச்சியை 329-ம் பக்கம் பார்க்கவும்.

## ஸ்ரீ நாராயண பண்டிதாசாரியார் இயற்றிய மணிமஞ்சரி.

(ஆறாவது ஸர்க்கம்) முன் தொடர்ச்சி.

21. ஏனென்றால் இவன் ப்ரம்மசாரி என்கிறான். இவனை யக்ஞோபவீதம் தரித்துக்கொள்ளவில்லை. ப்ரம்மசாரிக்குள்ள எந்த கர்மானுஷ்டானமுமில்லை. பகவத்பக்தி, விஷயஸுகங்களில் வைராக்யம் முதலிய பிரம்மசாரிகளுக்குரிய குணங்களுமில்லை. இவனிடம் அநேக தோஷங்களும் காணப்படுகின்றன. என்று ஸத்யப்ரக்ஞர் எண்ணினார். சங்கரிடம் மிக்க அறுவெறுப்பைக் கொண்டார். துஷ்டா! என்முன் நில்லாதே! விலகிச்செல்லென்று சொல்லி சங்கரனை தன் சிஷ்யர்களைக்கொண்டு தன்னிடமிருந்து விலகும்படிச்செய்தார். 22. இவ்வாறு அத்வைதமத ப்ரவர்த்தர்களாய் அத்வைதோபாஸனையைச்செய்துவந்த பிரஸித்தர்களான பாதீர்த்தர் ஸத்யப்ரக்ஞதீர்த்தர் இருவர்களும் சங்கரரின் சூழ்ச்சிக்குள்ளாகாமல் அவரை நிராகரித்துவிட்டவுடன் அவர்களிடம் சங்கரர் மகா துவேஷங்கொண்டார். எப்பாடுபட்டாவது பழிக்குப் பழியாக அவர்களை நசுக்கவேண்டுமென்று நிச்சயித்தார். அவருடைய பூர்வ ஜன்மமாகிய மணிமந்தனின் அஸுர ஸம்ஸ்காரத்துள்ளாகி அத்வைத உபாஸனையைக் கைக்கொண்டார். ஈசுவரன் ஸர்வக்ஞனும், ஸ்வதந்திரனும், ஸர்வசக்தனுமாயிருந்து ஜீவன் அல்பக்ஞனும் அல்பசக்தனும் அஸ்வந்தரனுமாயிருப்பினும் அவர்களிலுள்ள சித்துக்கள் ஒன்றுதானென்று சொல்லிக்கொண்டு ஜீவனுக்கும் ஈசுவரனுக்கும் அபேதம் தானென சின்மாத்ர ஐக்ய சிந்தனையைச் செய்தார். பரபிரம்மத்தை சில இடங்களில் சூன்யமென்றார். சில இடங்களில் நிர்குண ப்ரம்மமென்றார். 23. வேதங்களுக்கு விருத்தமான பௌத்தமதத்திலேயே விசேஷமான பற்றுதலையடைந்து அதைப்பிரசாரம் செய்ய கங்கணம் கட்டிக் கொண்டார். அதற்கு ஸகாயம் செய்பவர்கள் வேண்டுமென்று அவர்களை ஆங்காங்கு தேடி வந்தார். இவர் ஒருவரே ஏகாகியாய் இருந்தாரேயன்றி இவர் கொண்டிருந்த எண்ணத்தை முடிக்

துக் கொடுக்கும் வேறு எவரும் காணவில்லை. மனதில் பலவகை துரெண்ணம் ஏற்பட்டு இவருடைய புத்திக் கெட்டுப் போயிருந்தது. இவருக்கு யக்ஞோபவீதம் அப்போதே இல்லை. தலையையும் மொட்டையடித்துக்கொண்டார். மனம் போனபடி மூலை மூலைக்கு ஓடி தனக்கு வேண்டியவர்களை சேர்த்துக்கொள்ளப்பார்த்தார். ஒருவரும் அகப்படவில்லை. 24. இப்படி சங்கரர் ஆங்காங்கு அலைந்துகொண்டிருக்கும்பொழுது ஒருநாள் இரவில் சங்கரிருந்த இடத்திற்கு சகுனி முதலான எல்லா தைத்யர்களும் கும்பலாய் வந்து சங்கரரை மிகுந்த மரியாதை செய்து இவ்வாறு பேசினர். "சங்கராசாரியாரே! எங்கள் அஸுரகுலத்திற்கு தாங்கள்தான் ஆதரவு அளிப்பவர். தங்களைவிட வேறு கதி இல்லை. 25. காலடியில் பிறந்தவரே! தங்களுக்கு பரமமங்களமுண்டாகட்டும். தாங்கள் தாராளமான மனதுடையவர். எங்கள் வைரிகளான ஹரிவாயுக்களைச்சேர்ந்த வேதத்தைக் கெடுத்து அவர்களை சங்கடப்படுத்தவேண்டுமென்ற எங்கள் அசுரர்களின் மகத்தான காரியத்தை தாங்கள் எப்பாடுபட்டாகிலும் மனதைத்தளரவிடாமல் ஸாதித்துக் கொடுக்கவேண்டும். இதை மீண்டும் தங்களிடம் விக்ஞாபித்துக் கொள்ளுகிறோம். தாங்கள்தான் இக்காரியத்தில் ஸாதகராயிருப்பவரென்று அறிந்திருக்கிறோம். 26. வேதத்தையல்லவோ கெடுக்கவேண்டும்; பௌத்தர்களாலேயே இக்காரியம் நடைபெறலாமே. என்னை ஏன் சிரமப்படும்படி வற்புறுத்துகிறீர்கள் என்று தாங்கள் கேட்கலாம். அதைப்பற்றி தற்போதுள்ள நிலைமையைச் சொல்லுகிறோம். கேளுங்கள். நீங்கள் பிறப்பதற்கு முன் இப்போது கிழவராயிருக்கும் பட்டகுமாரர் அவருடைய பால்யத்தில் பௌத்தர்களின் அரசனான ஸுதன்வராஜனை சுவாதீனப்படுத்திக் கொண்டு பௌத்தர்களை வாதத்தில் வென்று பௌத்தர்களைக் கண்டமாத்திரத்தில் அவர்களை எரிகிற நெருப்பில்போட்டு பௌத்தமதத்தார் யாவருமே இக்காட்டில் கண்ணிற்படாமல் செய்து அவர்களைக் கொளுத்தினார். இதனால் பௌத்தர்கள் பயந்து இந்நாட்டைவிட்டு வெளிதேசங்களுக்கு ஓடிவிட்டனர். பலர் கப்பலேறி த்வீபாந்தரம் சென்றுவிட்டனர். பௌத்தர்கள் ஏராளமாய் வெளியேறவும் அவர்கள் தங்குமிடங்களிலும் அவர்



களை நிர்மூலம் செய்து வேதவிருத்தமான அவர்களின் மதம் அங்கும் பரவாதிருக்கும்படிச் செய்ய பட்டகுமாரரின் தம்பியான பட்டநாராயணரும் கப்பலேறி அவர்களுடன் அவர்கள் குடியேறின தேசங்களுக்குச் சென்றார். 27. பட்டநாராயணர் வெளிதேசங்களில் வெகுகாலம் வசித்திருந்து பௌத்தமதத்தின் குறைகளையெல்லாம் காட்டி, அந்த தேசத்தின் பிரஜைகள் பௌத்தமதத்தை துவேஷிக்கும்படி செய்துவிட்டு, கப்பலேறி இந்நாட்டிற்கு திரும்பிவந்து தமையனை பட்டகுமாரரிடம்வந்து எல்லா செய்திகளையும் அறிவித்தார். வைதிகோத்தமரான பட்டகுமாரர் தனது தம்பியான பட்டநாராயணர் வர்ணாசிரமதர்மங்களை நடத்திவர அர்கமில்லாததான பாபிஷ்டர்களின் நாட்டில் வெகுகாலம் வசித்திருந்து கர்மபிரஷ்டராய் ஆய்விட்டாரென்று நிச்சயித்து அவருடன் சேர்ந்து போஜனாதிகளைச் செய்யாமல் அவரை ஜாதியினின்றும் தள்ளிவைத்தார். 28. பட்டகுமாரர் தன்னை தம்பி என்றும் பாராமல் தான் கைக்கொண்டிருந்த காரியத்தையும் வைதிகதர்மத்தை நிறுத்த தான் எடுத்துக்கொண்ட பரிசிரமத்தையும் கருதாமல் தன்னை ஜாதிப்ரஷ்டனாக்கி ஜனங்கள் அவமதிக்கும்படிச் செய்துவிட்டாரென்ற துக்கத்தால் [illegible]னை பட்டகுமாரரிடம் கோபங்கொண்டு அவருக்கு விரோதம் செய்ய நிச்சயித்து அவர் கண்டித்துக்கொண்டிருந்த பௌத்தமதத்திற்கு ஆதரவு அளித்து பட்டகுமாரருக்கு விரோதமாக எதிர் பிரசாரம் செய்துவந்தார். அண்ணன் தம்பிகளுக்குள்ளிருந்த மனஸ்தாபத்தால் பௌத்தமதத்திற்கு தற்போது இந்நாட்டில் ஆதரவு ஏற்பட்டிருப்பதாயும் பௌத்தர்களின் ப்ராண சங்கடம் ஒருவாறு நீங்கியிருப்பதாயும் த்வீபாந்தரம் ஓடிப்போயிருந்த பக்கஸ்வாமி என்ற பௌத்த ஸந்யாஸிக்கு தெரியவந்தது. மீண்டும் இந்நாட்டில் பௌத்தமதத்தை ஸ்தாபிக்கவேண்டுமென்ற எண்ணத்துடன் பட்டகுமாரருடைய சங்கடம் மறுபடியும் ஏற்படுமோவென்று சம்சயப்பட்டுக்கொண்டே பக்கஸ்வாமி திரும்பி வந்தான். அவன் பட்டகுமாரருக்கு எதிராக பட்ட நாராயணர் இருப்பதைப்பார்த்து சந்தோஷப்பட்டு பட்டநாராயணருடன் சேர்ந்து விசேஷமாக பௌத்தமதத்தை ப்ரசாரம் செய்தான். 29. தன்

னிடமுள்ள மனஸ்தாபத்தால் எதிரிகளுடன் பட்டநாராயணர் சேர்ந்து தனக்கு விரோதமானதைச்செய்ய கைக்கொண்டிருக்கும் அவருடைய உற்சாகத்தைக்கெடுக்க பட்டகுமாரர் ஓர் உபாயம் செய்தார். அதாவது அவர் ஓர் இரகசியமான இடத்தில் சில காலம் பதுங்கியிருந்து தன் சிஷ்யர்களைக்கொண்டு தான் இறந்து போனதாய் எங்கும் பிரசித்தம் செய்யும்படிச்செய்தார். மகா ப்ராக்ஞரான தன் தமையனார் பட்டகுமாரர் இறந்துபோனாரென்ற செய்தி கேட்டவுடன் பட்டநாராயணர், தன் தமையனார் வைதிகக் கொள்கைகளைக் கைக்கொண்டுதான் அவைதிகமான ம்லேச்சதேச வாஸமாகிய அகாரியத்தைச் செய்ததற்காக ஸ்மிருதிகளில் சொன்னபடி தன்னை ப்ரஷ்டராகச் செய்தாரென்ற காரணத்தால் அவருக்கு தான் செய்த துரோகத்தை எண்ணி எண்ணி மனமுடைந்து துக்கம் தாளாமல் தன் பாபம் நீங்க அக்னிப்ரவேசம் செய்து உயிர் துறந்தார். 30. பிறகு பக்கஸ்வாமி சிறிதும் பயமின்றி வெளிவந்து ஆஸ்திகர்களைப்போல் நடையுடை பாவனைகளுள்ள கேரளதேசத்திய ப்ராசீன பௌத்தர்களை தன் சிஷ்யர்களாய்ச்சேர்த்துக்கொண்டு ஜனங்கள் கூடும் நடைவீதிகளிலும் பகிரங்கமான இடங்களிலும் நின்றுகொண்டு பௌத்தமதத்தைப் பற்றி உபன்யாஸம் செய்து அதை விசேஷமாய்ப் பரவச்செய்து வந்தான். 31. அச்சமயம் கௌடபாதரென்ற ஓர் விருத்தரான ஆஸ்திகர் ஸன்யாஸாசிரமம் பெற அபேக்ஷித்து அதை யாரிடமிருந்து பெறலாமென விசாரித்துவந்தார். பக்கஸ்வாமி தன் சிஷ்யர் மூலமாய் இதை அறிந்துகொண்டு ஆஸ்திக ஹிந்து சன்யாஸியைப்போல் வேடம் தரித்து கௌடபாதர் இருந்த இடம் சென்று இவ்வாறு பேசினார். 32. கௌடபாதரே! மகா ஞானியான ஸனத்குமாரரின் சிஷ்யன் நான். உங்களை மோக்ஷ ஸாதனமான உபாஸனாதிகளில் ப்ரவிருத்திக்கச்செய்யவே என்னை உங்களிடம் அனுப்பியிருக்கிறார். சன்யாஸத்தை விரும்பும் நீர் இனி ஸோஹமென்று உபாஸிக்கவேண்டுமேயல்லாது ஜீவனும் ப்ரம்மமும் பின்னர்களென்ற உபாஸனை இனி உங்களுக்கேன். வேண்டாம். அதை நீர் விட்டுவிடவேண்டியது. 33. என்றிவ்வாறு பக்கஸ்வாமி சொல்லவும் கௌடபாதர் தடபுடலாய் பக்கஸ்வாமியை நமஸ்கரித்து பகவன்! எனக்கு சன்யாஸம் தந்தருள வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். பௌத்த சன்னாஸியான பக்கஸ்வாமி அவ்வாறே கௌடபாதருக்கு ஸந்யாஸம் கொடுத்து அத்வைததத்வ உபதேசம் செய்தார். அதை மிகுந்த பக்தியுடன் கௌடபாதர் சிரவணம் செய்தார். (தொடரும்.)



ஸ்ரீமத்வாசாரியார் பாடம் சொல்லிக்கொண்டிருந்த சமயம் சீடர்கள் இப்பேர்பட்ட பாவகர்பிதமான அவருடைய கிரந்தங்களுக்கு யார் வ்யாக்யானம் செய்யப்போவதாய் வினவ, எதிரில் அசைபோட்டுக்கொண்டு உட்கார்ந்திருந்த விருஷபம் வ்யாக்யானம் செய்யப்போவதாய் அறிவிக்க சிஷ்யர்கள் அதைக்கொல்ல மருந்திட, இதை அறிந்த ஸர்வக்ஞர் த்வாதசஸ்தோத்திரம் ரசனம் செய்து அதன் காதில் ஜபித்து அதன் விஷத்தை நீக்கி ஸத்சாஸ்திரங்களை சிரவணம் செய்வித்ததாயும் அடுத்த ஜன்மத்தில் அவரே ஜயதீர்த்தராய் பிறந்ததாயும் இதிஹாஸமிருக்கிறது. ஆகவே இந்த ப்ரமாணங்களைக்கொண்டு ஸுரபதியான இந்திரன் ஸாக்ஷாத்தாயும் விருஷபரூபியாயும் ஸ்ரீமத்வாசாரியாரிடமிருந்து ஸத்சாஸ்திர சிரவணம் செய்து "குருபாவம் வ்யஞ்ஜயந்தீபாதி ஸ்ரீஜயதீர்த்தவாக்" என்றபடி ஸ்ரீமத்வாசாரியாரின் அபிப்பிராயத்தை சரியாய் தமது கிரந்தங்களால் விளங்கியிருக்கிறாரென்றும் நிச்சயமேற்படுகிறது. தேவாம்சமில்லாவிடில் ஸ்ரீமத்வாசாரியாரின் கிரந்தங்களுக்கு இவ்வளவு சிலாக்யமாய் ஸர்வோத்தம ரீதியில் வ்யாக்யானம் செய்திருக்கமுடியாது. அப்படியேத்தான் பல பிரமாணங்களுமறிவிக்கின்றன. ஸ்காந்தபுராணம், ஸ்ரீமுஷ்ண மாகாத்மியம் 9-வது அத்யாயத்தில் "வாயுஸ்து யதிரூபேண ஜனிஷ்யதி கலௌயுகே। ஸதசப்ரமிதிர்பூத்வா கலௌ தர்மான் வதிஷ்யதி॥" கலியில் யதிரூபியாய் வாயுபகவான் பூர்ணப்ரக்ஞரென்றவதரித்து ஸத்தர்மங்களைச் சொல்லப்போகிறாரென்று சொல்லி "விஷ்ணோராஞ்ஞயா தேவா: கலௌ தர்மப்ரவர்த்தகா:" பகவானுடைய ஆக்ஞையின் பேரில் தேவர்கள் கலியில் பிறந்து தர்மங்களை ப்ரவிருத்திக்கின்றனர் என்று சொல்லப்பட்டிருக்கிறது. "தம் மத்வம் மாருதம் ஸர்வே பரிவாரதயா ஸதா। ஸம்ஸேவிதும் ஸுராபூமாவவதீர்ணாஸ்ததாக்ஞயா। தேது தச்சிஷ்ய தாமாப்ய தன்மதம் து வ்யகோஷயன்" வாயுபகவானாகிய ஸ்ரீமத்வாசாரியாரை ஸேவிக்க அவருக்கு அடங்கிய பரிவார தேவர்கள் பூமியில் பிறப்பெடுத்து அவருடைய சிஷ்யர்களாயிருந்து அவருடைய சித்தாந்தத்தைப் பரவச்செய்தனரென்று பாத்மபுராணவசனமிருப்பதாய் ஸ்ரீமான் ஸ்ரீனிவாசாசாரியாரால் சொல்லப்பட்டிருக்கிறது. பிரம்மாண்டபுராணம் உடுபிக்ஷேத்ர மாகாத்மியத்திலும் இந்த சுலோகம் காணப்படுகிறது. பாஞ்சராத்ராகமம் ப்ரம்மஸம்ஹிதையில் ஸ்ரீமத்வாசாரியாரின் நாமங்களைச்சொல்லிவரும்பொழுது "ஜயதீர்த்தார்ய வாத: வ்யாஸபாதாம்புஜாச்ரய:" என்று ஜயதீர்த்தருக்கு உபதேசாதிகளைச்செய்தனுக்ரஹித்தவர் ஸ்ரீமத்வாசாரியாரென்று நாமநிர்தேசத்துடன் குறிப்பிடப்பட்டிருக்கிறது. வாயுபகவான் சௌவோத்கீதத்தால் உபாஸனைசெய்ய

ச்வானமாக உரு எடுத்துக்கொண்ட ஸமயம் தேவர்கள் ச்வானங்களாய் உரு எடுத்துக்கொண்டனரென்றும், ஹனுமாராய் அவதரித்த சமயம் தேவர்கள் வானரங்களாய் பிறந்தனரென்றும், க்ஷத்திரியரான பீமசேனராய் அவதரித்தசமயம் தேவர்களும் க்ஷத்திரியர்களாய்ப் பிறந்தனரென்றும், வாயுபகவான் ப்ராம்மணயதியாய் அவதரித்த சமயம் தேவர்களும் யதீசுவரர்களாய் அவதரித்தனரென்றும் ப்ராசீனரின் யுக்தியும் காட்டப்படுகிறது. தவிரவும் ஸ்ரீஜயதீர்த்தர் பீமசேனராகிய ஸ்ரீமத்வாசாரியாரின் அபிப்பிராயத்தை ஒட்டி எண்ணிறைந்த யுக்திகளால் பரமதங்களைக்கண்டித்து ஹரிதத்வத்தை விளக்கி ஹரிஸேவை செய்திருப்பதைப் பார்த்தால், "அஸாதாரண ஹேதுஸ்ச பீம ஏவப்ரகீர்த்தித:| த்விதீய: பல்குணஸ்சைவ த்ருதீயஸ்து புதிஷ்டிர:" என்று ஸ்ரீபகவத்பாதாள் ஓர் ப்ரகரணத்தில் சொன்னபடி கலிமுதலான அசுரர்களின் சாஸ்திரங்களைக் கண்டிப்பதில் பீமசேனராகிய ஸ்ரீமத்வாசாரியார் முக்ய காரணரென்றும் அவருக்கடுத்த அந்தஸ்தில் ஸ்ரீஜயதீர்த்தர் வருவதன் நிமித்தம் இரண்டாவது காரணராகிய இவர் அர்ஜுனவதாரமாயிருப்பது யுக்தமே என்றும் நிச்சயிக்க இடமிருக்கிறது. டிப்பணிகளைச் செய்த ஸ்ரீவியாஸராஜர் ஸ்ரீராகவேந்திரர் ஸ்ரீரகூத்தமர் ஸ்ரீவாதிராஜர் முதலிய மகான்கள் எல்லோரும் ஸ்ரீஜயதீர்த்தரை முன்னிட்டுக்கொண்டிருக்கின்றனர். இப்படிப் பலவகையில் விமரிசை செய்தாலும் ஸ்ரீஜயதீர்த்தர் அர்ஜுனனாகிய இந்திரனென்று ஏற்படுகிறது. ஸ்ரீஜயதீர்த்தர் தான் மகேந்திரனென்று சொல்லிக்கொண்டிருக்கலாமே என்றால் தேவர்கள் தங்கள் சொரூபத்தை வெளிக்காட்டாமல் மறைத்துக்கொள்வதில்தான் ப்ரியப்படுவார்கள். ஸ்ரீமத்வாசாரியார் மதஸ்தாபன உத்தேசத்தால் தம்மிடம் சிஷ்யர்களுக்கு விசுவாசமேற்படவேண்டுமென்று அவருடைய குருவான ஸ்ரீவேதவியாஸரின் உபதேச ரீதியை அனுஸரித்து "யஸ்யத்ரீண்யுதிதானி" முதலிய வாக்யங்களால் தம்முடைய சொரூபத்தைச் சொல்லிக்கொண்டார். இந்த தேவர்களின் சொரூபத்தை இதரர்களைக்கொண்டுதான் அறியவேண்டும். இவருடைய சொரூபத்தை வெளியிட்டவர் இவருடைய சாக்ஷாத் சிஷ்யரும் மகா ஞானியுமான ஸ்ரீவியாஸதீர்த்தரென்றவர். அவருடைய வாக்யம் நம்பத்தகுந்ததாயில்லை என்பதற்கு இதுவரை எந்த முகாந்திரமும் காட்டப்படவில்லையாதலால் அவருடைய வாக்யம் ப்ரமாணமே ஆகும். பீமாவதாரமான ஸ்ரீமத்வாசாரியாரின் காலத்திற்கும் ஸ்ரீஜயதீர்த்தரின் காலத்திற்கும் வ்யவதானமிருப்பதால் ஒன்றாய் சேர்ந்திருந்த பாண்டவர்கள் இவ்வாறு தனியே பிறந்ததாய் எப்படி எண்ணுவதென்று சந்தேகம் வரலாம். அதற்கும் ஓர் சமாதா



னம் கூறப்படலாம். பீமசேனர் பிராம்மணராய் அவதரித்த காலத்திலேயே துரௌபதி பிறந்தாளென்று 'ததைவ கிருஷ்ணாபி புவிப்ராஜாதா" என்று ஸ்ரீபகவத்பாதாள் சொல்லியிருப்பதிலிருந்து ஏற்படுகிறது. ஸ்ரீமத்வாசாரியார் காலத்தில் அப்படி யாரும் பிறந்ததாய் நம்மவர்களால் எந்த கிரந்தத்திலும் இதுவரை சொல்லப்பட்டிருப்பதாய் வெளிவரவில்லை. ஆனால் கருடபுராணம், பிரம்மகாண்டம் 17-வது அத்யாயத்தில் வாயு பாரதி இவர்களின் அவதாரங்களைப்பற்றிச்சொல்லும் ப்ரகரணத்தில் இந்த விஷயம் அடியிற்கண்டபடி பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. "தேஹம் த்யக்த்வா விசிஷ்டைவ காரடக்ராம ஸம்க்ஞகே ஸங்கரஸ்ய கிருகே வீந்த்ர பவிஷ்யதி கலௌயுகே| வாயோஸ்ஶுஶ்ருஷீய ரூபார்த்தம் கன்யைவ மிருதிம்கதா|" இதனால் காலடியில் சங்கரருடைய வீட்டிலேயே துரௌபதி, பார்வதி முதலான நான்கு தேவஸ்திரீகளுடன் கூடியவளாகவே பிறந்து கன்னிகையாகவே இருந்து இறந்தாளென்று தெரியவருகிறது. இந்த ப்ரமாணத்தைக்கொண்டு யோசித்தால் ஸ்ரீமத்வாசாரியார் பிறப்பதற்கு முன்பு துரௌபதி பிறந்திருக்கிறாள். அப்படி அவள் ஸ்ரீமத்வாசாரியாருக்கு முன்பு பிறந்து ஸ்ரீமத்வாசாரியாரின் ஸேவை என்ன செய்திருக்கக்கூடுமென்றால் "துரௌபதீ வைர ஹேதுஸ்ஸா" என்று சொன்னபடி சங்கரரின் வீட்டில் பிறந்து அவருடனேயேயிருந்து அவருக்கு விஷ்ணுவைஷ்ணவத்வேஷம் விருத்தியாகும்படிச் செய்திருக்கலாம். துரௌபதி இவ்வாறு முந்தி பிறந்து பீமசேனரை ஸேவித்திருக்கும்பக்ஷத்தில் அர்ஜுனன் அவருக்குப் பிந்தி பிறந்து கிரந்தரசனைகளால் அவரை ஸேவித்தது பொருந்தாமற்போகாது. ஆகவே "ததைவ கிருஷ்ணாபி புவிப்ராஜாதா" என்பதில் ததா என்பதற்கு கலியுக விவக்ஷயா ஸ்ரீமத்வாசாரியாருக்கு ஸமகாலம் துரௌபதி பிறந்ததென்று அர்த்தம் செய்யவேண்டும். இத்துடன் ஜயதீர்த்தரைப்பற்றியுள்ள எமது விமரிசையை நிறுத்திக்கொள்வோம். இதனாலேயே கலியுகத்தில் ஸாம்சஜீவர்களின் அவதார விஷயத்திலுள்ள சம்சயமும் பரிகாரமாகிறது. ஸ்ரீமத்வமதத்தை ப்ரவிருத்திக்க தேவர்கள் பிறந்திருக்கின்றனரென்று பிரமாணங்கள் மேலே காட்டப்பட்டிருக்கிறபடியால் ஸ்ரீபகவத்பாதாளின் கிரந்தங்களுக்கு டிப்பணி முதலியவைகளைச்செய்த ஸ்ரீவியாஸராஜர் ஸ்ரீராகவேந்திரர் ஸ்ரீவாதிராஜர் ஸ்ரீரகூத்தமர் போன்ற மகான்கள் தேவகணத்தைச்சேர்ந்தவர்களென்பதில் ஆக்ஷேபணையில்லை. ஸாம்ச ஜீவர்கள் பிறந்திருக்கபாதகமிருப்பதாய்ச்சொன்னது, ஆதாரமற்ற வார்த்தை என்று ஏற்படுகிறது. கக்ஷிக்காக ஸ்ரீராகவேந்திரர்போன்ற ப்ரத்யக்ஷ மகிமைகொண்ட

தேவர்கள் பிசாசங்களென்று சொன்னதும் குருத்ரோகமே ஆகும். கன்னடத்தில் கீர்த்தனரூபமாய் ஸ்ரீமத்வமதத்தை ப்ரவிருத்தித்தவர்களும் ஸம்ஸ்கிருதத்திலும் டிப்பணிகள் ஸ்வதந்திர கிரந்தங்கள் முதலியவைகளைச் செய்தவர்களுமான ஸ்ரீவியாஸராஜர் ஸ்ரீவாதிராஜர் ஸ்ரீராகவேந்திரர் முதலியோர்களும் ஹரிதாஸர்களேயாவார்கள். அவர்களும் மற்ற ஸ்ரீபுரந்தரதாஸர் ஸ்ரீவிஜயதாஸர் முதலியோர்களுமான ஹரிதாஸ கோஷ்டியைக் கண்மூடித்தனமாய் தகாதவழியில் இவர்கள் தாக்கியது இவர்களின் தடித்தனத்தை வெளிக் காட்டுவதாயாகும். ஆதலால்தான் இவர்களிடம் எமது மித்திரன் வாசகர்களான மாத்வ உலகத்தாருக்கு த்வேஷமுண்டாகி அநேகர் நாலுபக்கங்களிலிருந்தும் திக்கரித்திருக்கின்றனர். ஆதலால் இனி இவ்வகை தீயவழியில் இவர்கள் இறங்காமலும் நாமெல்லாம் படித்துவிட்டோமென்று கர்வங்கொள்ளாமலும், மமதைவிட்டு, தங்களுக்கேற்படும் சம்சயங்களைப் பரிகாரம் செய்து கொள்ள பிரமாணங்களைத் தேடுவதிலேயே ஊக்கங்கொண்டவர்களாய், எமது ப்ராசீனர்களின் பழக்கவழக்கங்களையும் பிரமாணங்களையும் ஸ்தாபித்துக்கொடுப்பதிலேயே மேலான நோக்கங்கொண்டவர்களாய் விஷ்ணுவைஷ்ணவ பக்தியைத்திடப்படுத்தும் மார்க்கத்தில் ஈடுபடுவார்களாக.

---

## விசேஷதினங்கள்.

---

### ஆஷாடமாஸம்.

| | | |
|---|---|---|
| 3—7—33 | சோமவாரம் | தசமி, ஹரிவாஸரம் இரவு மணி 9-41-க்கு பிறகு போஜனம் கூடாது. |
| 4—7—33 | மங்களவாரம் | ஏகாதசி உபவாஸம், சாதுர்மாஸ்ய விரதாரம்பம், சாக விரதம். |
| 7—7—33 | சுக்கிரவாரம் | பௌர்ணமி, வியாஸ பௌர்ணிமை. |
| 9—7—33 | பானுவாரம் | சிரவண உப. விஷ்ணுப உப. |
| 12—7—33 | புதவாரம் | ஸ்ரீஜயதீர்த்தர் புண்யதினம். |
| 16—7—33 | பானுவாரம் | தக்ஷிணாயன ஸங்க்ரமணம் புண்யகாலம். காலை மணி 10-10. வரை. |
| 18—7—33 | மங்களவாரம் | ஏகாதசி உபவாஸம். |
| 22—7—33 | சனிவாரம் | அமாவாசை, விஷ்ணுப. உப. |



## ஸ்ரீமத்வாசாரியார் இயற்றிய
# ஸ்ரீமகாபாரத தாத்பர்ய நிர்ணயம்.

### பதினெட்டாவது அத்யாயம்.

(காபிரைட், முன் தொடர்ச்சி.)

(ஸ்ரீமவே. பாகவத ரங்கநாதாசாரியார் மொழி பெயர்ப்பு.)

---

அர்ஜுனன் கர்ணனின் மேன்மையைப் பொறுக்காமல் அவனை அந்த சபையில் யுத்தத்திற்கழைத்தான். அப்பொழுது பீமசேனர் க்ஷத்திரியனல்லாத ஸூத ஜாதியைச் சேர்ந்தவனை யுத்தத்திற்கழைப்பது தர்மத்திற்கு விரோதமானதென்று அறிந்து கர்ணனுடன் யுத்தத்திற்குப் போகவேண்டாமென்று அர்ஜுனனைத்தடுத்து கர்ணனுடைய கையில் ஸூதஜாதிக்கு அருகமான சவுக்கைக்கொடுத்தார். க்ஷத்திரிய கன்னிகையிடம் பிறந்த கர்ணனுக்கு ஸூதத்வம் எப்படியென்றால் ப்ராம்மணோத்தமர்களின் குலத்தில் பிறந்தாலும் உபநயனம் முதலான சம்ஸ்காரமாகாமற்போனால் பிராம்மணனாய் எப்படி ஆகமாட்டானோ அப்படித்தான் கர்ணன் க்ஷத்திரியகுலத்தில் பிறந்தாலும் க்ஷத்திரியனுடைய சம்ஸ்காரமாகாமலிருந்தால் அவன் க்ஷத்திரியனாகமாட்டான். க்ஷத்திரிய ஜாதியான கர்ணனுக்கு க்ஷத்திரிய ஜாதி சம்ஸ்காரமாகாமல் சூதஜாதியின் சம்ஸ்காரமானதால் சூதத்வம் கர்ணனுக்கு வந்ததாய் அறியவேண்டும். பீமசேனர் இவ்வாறு கர்ணன் கையில் சவுக்கைக்கொடுத்து அவன் பதில் சொல்லமுடியாமல் செய்யவும் துரியோதனன், திருதராஷ்டிரனின் ஆக்ஞையின்பேரில் கர்ணனை அங்கதேசத்திற்கரசனாய்ச்செய்து கர்ணனுக்கு பட்டாபிஷேகம் செய்தான். த்ருதராஷ்டிரன் துரியோதனனிடமுள்ள சிநேகத்தால் அவன் சொன்னபடி கேட்டான். கர்ணனுக்கு பட்டாபிஷேகம் செய்தவுடன் அந்த இடத்திற்கு அவனுடைய தந்தையான அதிரதனென்ற ஸாரதி வந்துசேர்ந்தான். அப்பொழுது விருஷா என்ற பெயருள்ள அந்த கர்ணன் தன் தந்தையான அதிரதனை எல்[illegible]ரசர்களின் நடுவில் நமஸ்காரம் செய்தான். கர்ணனுடைய இந்த பித்ருபக்தி காரியத்தைக்கண்டு அங்கு வீற்

திருந்த எல்லா சாது ஜனர்களும் சந்தோஷமடைந்தனர். அந்த ரங்கஸ்தலத்தில் பீமஸேனர் துரியோதனன் இவர்கள் தங்கள் சிக்ஷையைக் காட்டுவதாய் ஓர் வியாஜம் வைத்து பெரியபாரமுள்ள கதைகளைத் தூக்கிக்கொண்டு கோபத்துடன் யுத்தத்திற்கு எதிர் கொண்டுவந்தனர். அப்பொழுது தேவதைத்ய மனுஷ்யர்கள் முதலான எல்லா சேதனா சேதனாத்மகமான ஜகத்து பீமஸேனர் துரியோதனன் இவர்கள் நிமித்தமாய் இரண்டு கக்ஷியாக ஆயினர். தேவர்கள், தேவர்களை அனுஸரிப்பவர்கள், ரிஷிகள் முதலியோர் பீமஸேனருடைய கக்ஷியையே அவலம்பித்தனர். அசுரர்களும் அவர்களை அனுஸரித்தவர்களும் துரியோதனின் கக்ஷியை ஆசிரயித்தனர். மனுஷ்யர்களில் தேவர்களின் ஸ்வபாவமுள்ளவர்கள் தைத்ய ஸ்வபாவமுள்ளவர்களென்ற பேதமுள்ளவர்களாய் இரண்டு கக்ஷியாக நின்றனர். மகா பாகுசாலியான பீமஸேனா! ஜயம் பெறு! ஹே துரியோதனா! ஜயம் பெறு என்று தேவதைத்யர்கள் இரு கக்ஷியாய் நின்றுகொண்டு கூக்குறல் போட்டனர். ஹூங்காரங்களைச் செய்தனர், பட்காரங்களைப்போட்டனர். பிறகு ப்ராம்மணச்ரேஷ்டரான துரோணர் மகா கோபங்கொண்ட ஜகத்தைப்பார்த்து இந்த பீமஸேனன், துரியோதனன் நிமித்தமாய் இந்த உலகம் நசித்துப்போகவேண்டாமென ஆலோசித்து தன் மகனான அசுவத்தாமாவைக்கொண்டு வீரர்களாயும், சத்ரு ஸம்ஹாரகராயுமுள்ள பீமஸேனன், துரியோதனன், இவர்களைத் தடுத்தார். அச்சமயம் அசுவத்தாமாசாரியார், பீமஸேனன், துரியோதனன் இவர்களிடம் வந்து ஹே பீமஸேனா! உன் தேவதா யோக்யதையில் உனக்கு ஸமமானவன் ஒருவருமில்லை. ஹே துரியோதனா! உன் அசுர, யோக்யதையில் உனக்கு ஸமமானவன் எப்பொழுதுமில்லை என்று சொல்லி பீமஸேனர் துரியோதனன் இவர்களைத் தடுத்தனர். துரோணாசாரியாரின் ஆக்ஞையின் பேரில் அசுவத்தாமாவால் தடுக்கப்பட்ட பீமஸேனர் துரியோதனன் இவர்கள் தம்தம் வீட்டுக்குச் சென்றனர். மகாகோபமுள்ள தேவதைத்யர்களைப்பார்த்து பரமசிவனுடன்கூடிய சதுர்முகன் சிறிது காலத்திற்குப்பிறகு பீமஸேனர் துரியோதனன், இவர்களின் ஜய பராஜயங்களை நீங்கள் காணப்போகிறீர்களென்று



சொல்லி அவர்களைத்தடுத்து தேவர்களுடன் தன்னுடைய ஸத்ய லோகத்திற்குச் சென்றனர். துரியோதனன் கர்ணனுடைய கையை பிடித்துக்கொண்டு தன் வீட்டிற்குச் சென்றான். பீமஸேனர் அர்ஜுனனுடைய கையை பிடித்துக்கொண்டு தம்முடைய வீட்டிற்குச் சென்றார். அர்ஜுனனால் கர்ணனைக்கொல்ல வேண்டுமென்று பீமஸேனருக்கு நிச்சயமேற்பட்டது. கர்ணனால் அர்ஜுனனைக் கொல்லவேண்டுமென்று துரியோதனனுக்கு நிச்சயமேற்பட்டது. பீமஸேனர் துரியோதனன் இருவர்கள், கர்ணார்ஜுனர்களைக் கொல்வதற்காக இணையற்றதான நீதியைக் காட்டினர். அர்ஜுனனுடைய கீர்த்தி, ஜயம் இவைகள் மேலிட பீமஸேனரின் ப்ரயத்னமுண்டாயிற்று. கர்ணனுடைய கீர்த்தி, ஜயம், இவைகளின் ஆதிக்கத்திற்காக துரியோதனனின் ப்ரயத்னமேற்பட்டது. பீமஸேனரின் ப்ரீதியின்பொருட்டு கிருஷ்ணனும் மற்ற தேவதைகளும் அர்ஜுனனுடைய கக்ஷியில் சேர்ந்தனர். முன்பு ஹனுமாரின் ப்ரீதியின்பொருட்டு ஸ்ரீராமர் முதலான தேவர்கள் சுக்ரீவனுடைய கக்ஷியில் எப்படி சேர்ந்தனரோ அப்படி அர்ஜுனனுடைய கக்ஷியில் ஸ்ரீகிருஷ்ணாதிகள் சேர்ந்தனர். இந்திரபகவான் அவருடைய வாலி ஜன்மத்தில் சுக்ரீவன் தன்னை ஸம்ஹாரம் செய்வித்தானென்ற துக்கத்தால் இப்பொழுது கர்ணனைக்கொல்வதற்காக பீமஸேனருக்குத்தம்பியாய் பிறந்தான். அந்த காரணத்தால் பீமஸேனர் அர்ஜுனனை சம்ரக்ஷித்தார். துரியோதனனுடைய ப்ரியத்திற்காக தைத்ய தானவர்கள் கர்ணனுடைய கக்ஷியில் சேர்ந்தனர். கர்ணன் அர்ஜுனன் இவர்கள் தேவர்களும், தைத்யர்களும் பந்தய வஸ்துக்களாய் ஆயினர். பிறகு இந்த ராஜகுமாரர்கள் துரோணாசாரியாரை அவருக்கு என்ன குருதக்ஷிணைக்கொடுக்கவேண்டுமென்று கேட்க துரோணாசாரியார் துருபதராஜனை கயிற்றால் கட்டிக்கொடுங்களென்றார். ராஜகுமாரர்கள் அப்படியே ஆகட்டுமென்று சொன்னார்கள். அப்பொழுது கர்ணனுடன்கூடிய துரியோதனாதிகளும் பாண்டவர்களும் துரோணாசாரியாருடன் துருபதராஜனின் நகரத்திற்குச் சென்றனர். பிறகு பீமஸேனர் இன்னார் ஸாமர்த்தியமுள்ளவர்கள், இன்னார் ஸாமர்த்தியமில்லாத

வர்களென்றறிவிப்பதற்காக குருவான துரோணாசாரியாரைப் பார்த்து இவ்வாறு பேசினார். ஹே விப்ரோத்தமா! இந்த துரியோதனாதி குமாரர்களுக்கு தடுக்கமுடியாததான அஹங்காரமிருந்துவருகிறது. ஆகையால் இந்த குமாரர்கள் முதலில் யுத்தம் செய்யச் செல்லட்டும். துருபதராஜன் இந்த குமாரர்களுக்கு ஸ்வாதீனமாகப்போவதில்லை. இவர்கள் காரியத்தை ஸாதிக்காமல் திரும்பிவந்தபொழுது நாங்கள் ஐவர்களும் போய் தங்கள் சத்ருவான துருபதராஜனைக் கட்டிக்கொண்டு வருகிறோம். இதில் சந்தேகமில்லை. என்றிவ்வாறு சொல்லி பீமசேனர் ஊருக்கு வெளிப்புரத்திலேயே நின்றுவிட்டார். த்ரோணாசாரியாருடன் பாண்டவர்கள் வெளியே நின்றுவிடவும் கர்ணனுடன் கூடிய துரியோதனாதிகள் ஆயுதபாணிகளாய் துருபதராஜனுடைய நகரத்திற்குள்ளே சீக்கிரம் வந்தனர். தன்னைப்பிடிக்க விருப்பங்கொண்டுவந்த அந்த குமாரர்களைப்பார்த்து துருபதராஜன் மூன்று அக்ஷௌஹிணி ஸைனியங்கொண்டு அரண்மனையிலிருந்து வெளியே யுத்தத்திற்குப் புறப்பட்டான். அந்த துருபதராஜனின் ஸேனாதிபதிகள் பையன்களை வளைத்துக்கொண்டு பாணவிருஷ்டியைச் செய்துகொண்டு மிகவும் சங்கடப்படுத்தினர். ஊரிலுள்ள எல்லா ஸ்திரீகளும், பையன்களும் கர்விஷ்டர்களான துரியோதனாதிகளையும் அடித்தனர். நகரத்திலுள்ளேயிருந்த ஸ்திரீ ஜனங்கள் மாளிகையின்மீது நின்றுகொண்டு வெகு சுகமாய் வளர்ந்த துரியோதனாதி ராஜகுமாரர்களை, கற்களாலும், உலக்கைகளாலும் அதிகமாய் அடித்தனர். துருபதராஜனுக்கு அவன் செய்த தபஸ்ஸால் சூரியன் கொடுத்த வரமிருந்தது. அது என்னவென்றால் உன் நகரத்தின் ஒரு யோஜனை சுற்றிலும் உன்னை ஒருவரும் ஜயிக்கவேண்டாமென்று. இவ்வாறு சூரியனுடைய வரத்தால் தோல்வியடைந்து சுகமாய் வளர்ந்த கர்ணன் முதலான ராஜகுமாரர்கள் திரும்பி பாண்டவர்களிருந்தவிடத்திற்கு ஓடினர். ஸ்திரீஜனங்கள் பாலகர்கள், விருத்தர்கள் இவர்களடங்கிய பாஞ்சாலதேசத்து ஜனங்களால் துறத்தப்பட்டவர்களாய் ஹே பீமா! ஹே அர்ஜுனா! என்று கூவிக்கொண்டு இந்த ராஜகுமாரர்கள் பாண்டவர்களிருந்தவிடம் ஓடிவந்தனர். துரியோதனாதிகள் ஓடிவந்ததைப்பார்த்துவிட்டு யுத்தம் செய்பவரில் ச்ரேஷ்டரும் ஆரம்பித்த காரியத்தை முடிப்பவருமான பீமசேனர் கையில் தனுஸ்ஸை எடுத்துக்கொண்டு முதலில் ரதத்திலேறினார். (தொடரும்.)

# சந்தாதாரர்களுக்கு விக்ஞாபனம்.

அடுத்த சஞ்சிகையுடன் இம்மாத்வமித்திரனுக்கு ஐந்தாவது வருஷம் முடிவுபெறுகிறது. ஆறாவது வருடத்திய சஞ்சிகை துவக்கப்பட இதன் சந்தாதார நேயர்களின் விசேஷமான சகாயத்தையும் கூட்டுறவையும் நாடுகிறேன். இப்பத்திரிகையின் தற்கால பொருளாதார நிலைமையோ என் தைரியத்தைக் கலைத்திருக்கிறது. சென்ற மூன்று வருஷங்களாகவே இப்பத்திரிகை அதிக சிரமத்தின்பேரில்தான் நடத்தப்பட்டுவருகிறது. இதை அறிவித்து இதற்கு மாத்வப்ரமுகர்களும் மடாதிபதிகளும் திரவிய ஸகாயம் செய்ய பலதடவை விக்ஞாபனம் செய்துகொண்டும் பயன்படவில்லை. ஆனால் இம்மித்திரன் மாத்வ உலகத்தாரால் மதிக்கப்படவில்லையென்று சொல்வதற்கில்லை. என் சுற்றுப்பிரயாணத்தில் நான் நேரில் கண்டுகொண்டபடி பல ஊர்களில் ஒருவருக்கு ஓர் மித்திரன் வந்தவுடன் அதைப்படிக்க பலர் மூந்திக்கொண்டு சில சந்தர்ப்பங்களில் சொந்தக்காரர்களுக்கே அந்த சஞ்சிகை கிடைக்காமற்போய் அந்த சஞ்சிகையின் மற்றொரு பிரதியை அனுப்ப என்னிடம் அந்த காரணத்தைச் சொல்வதுண்டு. இம்மித்திரனின் அரிய மத ஸேவையை புகழ்ந்து நானு பக்கங்களிலிருந்தும் நற்சாக்ஷிப்பத்திரங்கள் கிடைக்கின்றன. இவ்வாறு மாத்வமித்திரன் வாசகர்கள் ஏராளமாய் இருப்பதற்குத் தகுந்தபடி மாத்வமித்திரனுக்கு திரவிய சகாயம் செய்யும் சந்தாதாரர்களின் சங்கியை விருத்தியாகாமல் பொருள்கஷ்டம் ஏற்பட்டிருப்பதைத் கர்ண மனதிற்கு பீதியை உண்டுபண்ணியிருக்கிறது. இதுவரை எனக்கு இம்மித்திரனை நடத்திவருவதில் பல துறைகளில் பல வகையான இடஞ்சல்கள் ஏற்பட்டிருப்பினும் அவைகளை பொருட்படுத்தாமலும் ஸ்ரீ குருராகவேந்திரரின் ஆக்ஞையையே பெரிதாக எண்ணி என் உயிருக்குயிராய் இம்மித்திரனைக் கருதி, இதை இதுகாறும் நடத்தி ஆஸ்திக உலகில் மாத்வர்களுக்காகவென்று தனிமையான மத்வ சாஸ்திரங்களைப்போதிக்கும் ஓர் பத்திரிகை பிரஸித்தமாயிருக்கும்படி செய்திருக்கிறேன். இதற்கு ஸ்ரீ ராகவேந்திரரின் அருளும், மதாபிமானங்கொண்ட சந்தாதார கன

வான்களின் போஷணையும், காரணமென்பதை உணர்ந்திருக்கிறேன். ஆயினும் இம்மித்திரன் இந்த நிலையிலேயே இன்னமும் சிறிதுகாலமிருந்தால் இம்மித்திரன் வெளியாவதற்கு முந்தியும் பிந்தியும் வெளியாகி அஸ்தமனமடைந்திருக்கும் அநேக மாத்வ பத்திரிகைகள் போன ரஸ்தாவையே இது தேடவேண்டிவருமென்பதை அறிவிக்க வருத்தப்படுகிறேன். ஐந்து வருடகாலம் வெகு சிலாக்யமாய் நடத்தப்பட்டுவந்த ஓர் பத்திரிகை இந்த நிலைமைக்கு வருவதை இம்மித்திரனிடம் அளவிலா அன்பை பொழிந்துவரும் சந்தாதாரர்கள் கண்டு சகியார்களென்பது திண்ணம். தாராள நோக்கங்கொண்ட சந்தாதாரர்களே! இம்மித்திரனை சம்ரக்ஷிக்கும் உபாயம் உங்களிடமேயிருக்கிறது. நீங்கள் சிரத்தையை அதிகமாய் எடுத்துக்கொண்டால் உங்களால் என்ன ஆகாது? அடுத்தவருடத்திய முதல் பத்திரிகை வி.பி.யில் அனுப்பப்படுமென்று காத்திராமலும், வி. பி. யில் அனுப்ப அதிகமான தபால் சார்ஜ் தொகையை முன்பணமாய் கட்டவேண்டிய அவசியத்தைத்தராமலும், இந்த வி.பி.கள் அனுகூலமான காலங்களில் சந்தாதாரர்களின் கையில் சேரவேண்டுமே அவர்கள் திருப்பிவிட்டு நஷ்டத்தை விளைவிக்காமலிருக்கவேண்டுமே என்ற சிந்தை ஏற்படாமலும் செய்து இப்பொழுதுமுதற்கொண்டே சந்தாதொகையை மணியார்டர் மூலம் இப்பத்திரிகாலயத்திற்கனுப்பி சந்தாதாரர்களின் சங்கியையை நிஷ்கரித்துக்கொடுத்து தைரியப்படுத்துங்கள். மேலும் த்வைதமதத்தை நிலைநிறுத்த பதீர்த்தர், ப்ராக்ஞதீர்த்தர், ஜயதீர்த்தர், வாதிராஜதீர்த்தர், விஜயீந்திரதீர்த்தர், முதலியோர் எப்பாடுபட்டனரென்று சிறிது சிந்தித்து, சிரமம்பாராமல் அவரவர்களின் நண்பர்களை போதித்து, ஒவ்வொரு சந்தாதாரரும் தலா இரண்டு சந்தாதாரர்களுக்குக் குறையாமல் சேர்த்துக்கொடுங்கள். இம்மித்திரன் இதுவரை சந்தாதாரர்களின் சந்தா போஷணையாலேயே நடத்தப்படுகிறதே ஒழிய எந்த மடாதிபதியிடமிருந்தாவது தனவந்தரிடமிருந்தாவது Donations முதலியவைகளைப் பெற்றதில்லை. சந்தாதாரர்கள் ஏராளமாயிருந்தால் இதரர்களை சிரமப்படுத்தவும் உத்தேசமிருந்திருக்கவில்லை. தற்போது எல்லாம் மாறியிருக்கிறபடியால் சந்தாதாரர்கள் எல்லா வகையிலும் இம்மித்திரனுக்கு உதவிபுரிந்து இதற்குப்ராணதானம் தரவேண்டு



மாய் வேண்டுகிறேன். சந்தாதாரர்களை சந்தோஷப்படுத்தவேண்டிய இம்மித்திரனின் காரியங்கள் இன்னமும் அநேகம் இருக்கின்றனவென்பதை நான் உணராமலில்லை. அதற்கு இம்மித்திரனின் பக்கங்களை விருத்தியாக்கவேண்டியிருக்கிறது. தற்போதுள்ள பக்கங்கள் இம்மித்திரனின் ஆரம்ப எண்ணத்தையே தீவிரமாய் முடித்துக்கொள்ள போதுமானவைகளாயில்லை. இதரர்கள் அன்புகூர்ந்து அறிவிக்கும் விஷயவிசாரங்களையும் வர்த்தமான விசேஷங்களையும் சில சந்தர்பங்களில் பிரசுரிக்கமுடியாமற்போய் அவர்களின் மனக்கசப்பு ஏற்படும்படியும் நேரிடுகிறது. ஒருக்கால் இது அதிகரித்தால் இம்மித்திரனின் சந்தா பலத்திற்கே ஹானி ஏற்படுமோவென்ற பயமும் இப்பால் பாதிக்கிறது. ஆகவே ஸ்ரீ பகவத்பாதாளின் ஹரிதத்வ ஸேவையைச் செய்து ஆண் பெண் இருபாலர்களுக்கும் ஹரிபக்தியை ஊட்டிவரும் கிங்கிரனை இம்மாத்வமித்திரனுக்கு மேற்கண்டபடி சந்தாதார ஆஸ்திக சிகாமணிகள் உடனே சந்தா தொகையை அனுப்பித்தும், தலா 2 சந்தாதாரர்கள்வீதமாவது சந்தாதார்களைச் சேர்த்தும், இம்மித்திரனை ஸம்ரக்ஷித்து ஆதரவளிக்க வேண்டுமாய்வணக்கமாய் பிரார்த்தித்துக்கேட்டுக்கொள்ளுகிறேன். இப்படிக்கு,

ஆத்யம் பாகவத ரங்கநாதாசாரியார், ஆசிரியர்.

# செய்தித்திரட்டு.

---

ஸத்யமங்கலத்தில் 16, 17, 18—5—33 இந்த மூன்று நாட்களில் ஸ்ரீவியாஸராஜமடம்ஸம்ஸ்தாநாதிபதி ஸ்ரீஸ்ரீவித்யாவாரிதிதீர்த்தஸ்வாமிகளவர்களால் மகாஸமாராதனை மகோற்சவம் அதிவிமரிசையாய் நடத்தப்பட்டதென்றும் வேதமூர்த்திகளாகிய கோயமுத்தூர் விஜயீந்திராசாரியார், தெக்கலூர் கிருஷ்ணாசாரியார், மந்திராலயம் கிருஷ்ணாசாரியார் முதலிய பண்டிதர்களும் ஸ்ரீமான்களான டிஸ்டிரிக்ட் முன்சீப் D. S. ராஜாராவ், S. S. வியாஸராவ், போலீஸ் இன்ஸ்பெக்டர் சுப்பராவ் முதலிய லௌகிக ப்ரமுகர்களும் பல ஊர்களிலிருந்து வந்திருந்தனரென்றும் ஸ்ரீ ஸ்ரீயவர்கள் மூல கோபாலகிருஷ்ணரையும் பட்டாபிராமரையும் வஜ்ஜிரமண்டபத்தில் வைத்து லக்ஷக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள திவ்யாபரணங்களால் அலங்கரித்து பூஜைசெய்ததும் ஸபாகா

வத்தில் அசேஷ ஜனங்களுக்கும் திவ்ய பக்ஷ்யபோஜ்யங்களுடன் அன்ன பானங்களளித்தும் வித்வான்களுக்கும் வித்யார்த்திகளுக்கும் ஸன்மானம் அளித்ததும் இரவில் தர்பார் நடத்தியதும் கொண்டாடத்தகுந்ததாய் இருந்ததென்று ஸத்யமங்கலத்திலிருந்து நமது நிருபர் அறிவிக்கிறார்.

கோயமுத்தூர் சாமையர் புது வீதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் ஸ்ரீகோபாலகிருஷ்ணஸ்வாமிக்கு ஸ்ரீமலே எச். ஸ்ரீனிவாஸாசாரியாரவர்களால் மேய் 2உமுதல் 10 நாட்கள் வெகு விமரிசையாய் மகோத்சவம் நடத்தப்பட்டதென்றும் ப்ரதிதினம் காலையில் ஹரிபஜனை, மத்யான்ஹம் ஸர்வ மூலக்ரந்த பாராயணம், பற்பல பக்ஷ்யபோஜ்யங்களுடன் பிராம்மண ஸந்தர்ப்பணை, இரவில் விதவிதமான அலங்காரங்களுடன் ஊர்வலமும், ஸ்ரீநரஸிம்ஹஜயந்தியன்று ரதோத்சவமும், மறுநாள் முத்துப்பல்லக்கும், அதற்கடுத்தநாள் ஸம்ப்ரோக்ஷணமும் ஊஞ்சல் உத்சவமும் வெகு விமரிசையாயிருந்ததென்றும், ஏகாதசி இரவில் ஸ்ரீமான் மொட்டைதாஸேந்திர தெக்கலூர் வெங்கடரமணதாஸரவர்களால் சந்திரஹாஸ சரித்திரம் ஹரிகதையும் அதற்கு முந்தி ஓர் இரவு சீதாகல்யாணம் ஹரிகதையும் நடத்தப்பட்டதென்றும் வெளியில் வருவாகும் சொற்பதிரவியங்களைக்கொண்டு ஸ்ரீமலே எச். ஸ்ரீனிவாசாசாரியார் ரதோத்சவாதி இவ்வளவு பிரபலமான உத்சவங்களை நடத்திவருவதிலிருந்து பகவான் ஸ்ரீகோபாலகிருஷ்ணரின் அசிந்த்யாத்புத சக்தி வெளியாகிறதென்றும் மேற்கண்ட ஆசாரியாரவர்கள் இப்படியே வெகுகாலமிருந்து பகவதனுக்ரஹம் ஸம்பூர்ணம்பெற்று விஷ்ணுவைஷ்ணவ கைங்கரியம் செய்துகொண்டு இதர பகவத்பக்தர்களையும் இதில் இன்னமும் பலகாலம் ஈடுபடும்படிச்செய்து அமோகமாயிருக்க ஸ்ரீமத்வரமணனை ப்ரார்த்திப்பதாய் கோயமுத்தூரிலிருந்து ஸ்ரீமான் T. G. கோகுலசந்திரராவ் அறிவிக்கிறார்.

சின்னதாராபுரம் ஸ்ரீவெங்கடரமண ஸ்வாமிக்கு வழக்கப்படி இவ்வருஷம் 17—5—33உ யன்று அக்னிநக்ஷத்திரம் அபிஷேகமும் மத்யானம் சுமார் 100 பேருக்கு ப்ராம்மண ஸந்தர்ப்பணையும் இரவில் மேளதாளங்களுடன் குதிரைவாகன உத்சவமும் நடந்ததென்றும் இதற்கு மாத்வ கனவான்கள் எடுத்துக்கொண்ட முயற்சி போற்றத்தகுந்ததென்றும் ஸ்ரீவெங்கடேசனின் அருளால் இவ்வுற்சவம் சாசுவதமாய் நடைபெறவேண்டுமென்றும் ஸ்ரீமான் கே. ராமராவ் அறிவிக்கிறார்.

ஸ்ரீமுஷ்ணத்தில் ஸ்ரீபூவராகஸ்வாமிக்கு நடந்த சைத்ர ப்ரம்மோத்சவத்தில் பகவானுக்குப் பின்னே மாத்வஸம்பிரதாயப்படி ஹரிதாஸ பஜனை செய்யப்பட்டு வந்ததென்றும் அவ்வூர் பஜனை கோஷ்டி



யாருடன் ஸ்ரீமான்களான திருப்பாபுலியூர் குப்பாசாரியார் விருத்தாசலம் வக்கீல் S. கிருஷ்ணராவ், கின்னே ஸௌந்திரராஜராவ் இவர்கள் சேர்ந்த பஜனை கோஷ்டி கலந்துகொண்டு பஜனை செய்துவந்தது பக்தி பரவசமாக்கியதென்றும் இப்படியே இந்த கோஷ்டியார் பிரதிவருடமும் வந்து கைங்கரியம் செய்ய ஸ்ரீபூவராகவன் அனுக்ரஹிக்கவேண்டுமென்றும் ஸ்ரீமலே புராணிகம் வெங்கடரமணாசாரியார் முயற்சியின்பேரில் ஸ்ரீமுஷ்ணம் மாத்வபஜனை ஸபையாரால் ஸ்ரீமுஷ்ண புஷ்கரணி ப்ரபாவமென்னும் மணிக்ரீவ உபாக்யானம் நாடக ரூபமாய் இச்சமயம் நடத்திக்காட்டப்பட்டது மெச்சத்தகுந்ததாயிருக்கிறதென்றும் ப்ராதஸ்நானம் ஸ்ரீமான் ரகூத்தமராவ் அறிவிக்கிறார்.

இந்நகர் ஸ்ரீவிஜயீந்திரஸ்வாமிகளின் புண்யதின ஆராதனை காலத்தில் ஆராதனையன்று பிராம்மணபோஜனத்தில் ஓர் பக்ஷ்யத்தைச் சென்ற நான்கு வருடமாய் அளித்துவந்த அந்த கைங்கரிய சபைக்கு சென்ற வருடத்தில் வரவு ரூ. 139-1-7 என்றும் செலவு ரூ. 107-9-0 என்றும் ரூ. 31-8-7 பாக்கியிருக்கிறதென்றும் இவ்வருடம் இந்த பாக்கித்தொகையைக்கொண்டே ஏதாவது ஓர் கைங்கர்யத்தை செய்து இந்த ஸபையைக்கலைத்துவிட உத்தேசமென்றும் இதன் காரியதரிசிகளாகிய ஸ்ரீமான்களான N. சேஷகிரிராவ் R. K. குப்பண்ணாசாரியார் அறிவிக்கிறார்.

ஸ்ரீராகவேந்திரஸ்வாமிமடம் ஸம்ஸ்தானாதிபதி ஸ்ரீ ஸ்ரீஸுவ்ரதீந்திரதீர்த்தஸ்வாமிகள் கத்வால் ஸம்ஸ்தானத்திலிருக்கும்பொழுது மகோதர வியாதி உண்டாக பிறகு ஸ்வப்னம் விழுந்ததின்பேரில் மந்திராலயம் வந்து சேர்ந்து அங்கு சுமார் 2 மாதகாலம் அந்த உபாதியால் வருந்தி 6–5–33 வைசாக சுத்த ஏகாதசியன்று துங்கபத்திரா கரையில் மந்திராலய புண்யபூமியில் ஸ்ரீராகவேந்திரரின் பிருந்தாவனத்தின் சமீபத்தில் மத்தியானம் $2\frac{3}{4}$-மணிக்கு பிருந்தாவனஸ்தரானார். இதுவரையில் மேற்படி மடத்து திவானாயிருந்தவரும் இந்த ஸ்வாமிகளின் பூர்வ ஸ்வாமிகளாகிய ஸ்ரீஸுசீலேந்திரதீர்த்தரின் குமாரருமான ஸ்ரீமத்வ சாஸ்திர ஸம்பன்ன ஸ்ரீனிவாசமூர்த்தியாசாரியாரவர்களுக்கு இதற்கு முன் 28–4–33உ வெள்ளிக்கிழமையன்று எல்லோர் நடுவில் பல மந்திராக்ஷதைகளைத் தந்து 29உ யன்று சன்யாஸாசிரமம் தந்து ஸ்ரீஸுயமீந்திரதீர்த்தரென்று நாமகரணமும் செய்து ஸம்ஸ்தான தேவபூஜாதிகளைக்கொடுத்து ஆதிபத்யத்தையுந்தந்தார். இந்த ஏற்பாடு மைசூர் கவர்ன்மெண்டாரால் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறதென்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

ஸ்ரீ உத்தராதிமடம் ஸ்வாமிகள் வடதேசங்களில் வெகு நாள் சஞ்சரித்து திக்ஜயம் செய்துகொண்டு தற்போது ஹைதராபாத் பிராந்தியத்திலிருப்பதாயும் சாதுர்மாஸ்ய ஸங்கல்பம் அங்கே நடக்குமென்றும் ஓர் செய்தி எட்டியிருக்கிறது.

ஸ்வீகாரம்போனவன் ஒருவன் அவனுடைய ஜனகதாயார் இறந்துபோக, மூன்று நாள் ஆசௌசமிருந்துவிட்டு பிறகு விக்ரஹாராதனை முதலிய நித்ய கர்மானுஷ்டானங்களைச் செய்துவரவும், இந்த அம்மாளின் சாமக்கிரியைகள் முடிந்தபிறகுதான் அவன் மேற்கண்டவைகளைச் செய்யவேண்டுமென்றும் அப்படி அதற்கு முன் செய்தது பிசகென்றும் ஆனால் அந்த நாட்களுக்குள் பிதருச்ராத்தாதிகள் நேர்ந்தால் அதை விடலாகாதென்றும் சிலர் அனுவசியமாய்க் கூட்டம் போட்டு சொல்லி ஸ்வீகாரம்போனவனின் மனவருத்தத்தைக் கிளப்பியிருக்கிறபடியால் இது சம்பந்தமான தர்மசாஸ்திர நிர்ணயத்தை மித்திரன் வாயிலாய் அறிய ஆவலுள்ளவனாயிருக்கிறேனென்று ஓர் சந்தாதாரர் கேட்டுக்கொள்ளுகிறார்.

---

# பீமசேன விஜயம்.

---

ப்ரதமோ ஹனுமாந் நாம த்விதீயோ பீமஏவச/
பூர்ணப்ரக்ஞஸ்திருதீயஸ்து பகவத் கார்யஸாதக://

என்று வாயுபகவானுக்கு ஹனுமார் பீமசேனர் மத்வர் என்று மூன்று அவதாரங்களென்றும். இவர்கள் பகவானுடைய காரியத்தை ஸாதித்துக்கொடுக்க முக்யமான அங்கபூதர்களானவர்களென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஹனுமாருடைய கீர்த்தி ஸ்ரீமத்ராமாயணாதிகளால் நன்கு விளங்கி எல்லோராலும் மதிக்கப்பட்டிருக்கிறது. ஸ்ரீமத்வர் ஓர் மதாசாரியாராதலால் எண்ணிறைந்த கிரந்தங்களைச்செய்து தூர்வாதிகளை ஜயித்து தன் மதத்தை ஏற்படுத்தியதன் நிமித்தம் அவரும் மதிக்கத்தகுந்தவராவார். நடுவிலுள்ள பீமசேனரின் விஷயம் சரியாய் புலப்படுவதில்லை. தாத்பரிய நிர்ணயத்தில் ஸ்ரீமத்வாசாரியார் விசேஷமாக அவரைப்பற்றி கூறியிருந்தாலும் மகாபாரத கதைகளினின்றும் பீமசேனர் ஓர் பெரிய முரட்டாத்மாவென்றும் ஏராளமாய் சாப்பிடக்கூடியவரென்றும் பிரம்மாண்டமான சரீர பலம் வாய்ந்தவ



ரென்றும் ஏற்படுகிறதே ஒழிய அர்ஜுனன்போல் கீதாசிரவணம் செய்த ஞானியும் கிருஷ்ணனுடைய ப்ரீதிக்கு முக்ய பாத்ரனுமாயிருந்ததாய் தோன்றவில்லை. மேலும் பீமசேனருடைய விஷயத்தில் ஜுகுப்ஸிதமான காரியங்களநேகம் காணப்படுகின்றன என்று ஓர் நண்பர் 1914 வருஷத்தில் என்னை ப்ரச்னம் செய்ய மாத்வஸபையின் ஆதரவில் நான் அநேக மகாபாரத ப்ரமாணங்களுடன் பீமசேனரின் மாகாத்மியத்தைப்பற்றி அநேக உபன்யாஸங்களைச்செய்திருக்கிறேன். இப்பொழுது மகாபாரத தாத்பர்ய நிர்ணயத்தில் சென்ற சஞ்சிகையில் வெளியான பீமசேனரின் குணக்ரியங்களைப்பார்த்து அவ்வாறே ஒருவர் சம்சயப்பட்டதின் நிமித்தம் பீமசேனரின் மகாமாகாத்மியமடங்கிய அவருடைய இனிமையான சரித்திரம் வாசகர்களின் மனதிருப்தியுமாறு தனியாய் எழுதப்படுகிறது.

## அவதாரிகை.

சேதிதேசத்து ராஜனாகிய மகா பாகவதோத்தமனான உபரிசரவசுராஜன் வேட்டைக்காக வனத்தில் சஞ்சரித்துக்கொண்டிருக்கையில் மகாரூபலாவண்யமுள்ள அவனுடைய பாரியாளான கிரிகையின் ஞாபகம்வந்து அவனுடைய ரேதஸ் ஸ்கலனமாக அதை அபிமந்திரித்து ஓர் இலையில் பந்தோபஸ்து செய்து கட்டி ஓர் ச்யேனபக்ஷியிடம் கொடுத்து தன் பாரியையிடம் அனுப்பினான். வழியில் மற்றொரு ராஜாளிவந்து அந்த ச்யேன பக்ஷியுடன் சண்டைபோட ரேதஸ் யமுனையின் ஜலத்தில் விழுந்து அதை ஓர் மீன் விழுங்கிற்று. அந்த உபரிசரவசு ராஜனின் கர்பம் மீன் வயிற்றில் விருத்தியாகிவரவும் ஆண்பெண் இரட்டைப் பிள்ளைகள் அந்த மீன் வயிற்றினின்றும் செம்படவர்களால் எடுக்கப்பட்டு, அவர்களின் அரசனிடம் ஒப்புவிக்கப்படவே, அந்த அரசனான தாசராஜன் அந்நாட்டின் சக்ரவர்த்தியான உபரிசவசு ராஜனிடமே அந்த குழந்தைகளை ஒப்புவித்தான். உபரிசவசு ராஜன், ஆண் குழந்தையைத் தான்வைத்துக்கொண்டு அப்பெண் குழந்தையை திருப்பி தாசராஜனிடமே கொடுத்தான். அந்தப்பெண் மீன் வற்றிலிருந்ததால் மீன் நாற்றம் அவளுக்கிருந்தது.

னால் அவள் மத்ஸ்யகந்தி என்றழைக்கப்பட்டிருந்தாள். தாசராஜன் அவளை இலவசமாய் யமுனையில் படகு ஓட்டும்படி ஏற்பாடு செய்திருந்தான். ஒரு ஸமயம் அங்கு வசிஷ்டரின் பௌத்திரரான பராசரர் வந்து தமக்காக படகைச் செலுத்தும்படிக் கேட்க ஆயிரம் ஜனங்கள் சேர்ந்தால்தான் நான் இந்த படகை செலுத்தமுடியும்; இல்லாவிடில் இது செல்லாதென்று அவள் சொல்ல, பராசரர் தன்கையிலுள்ள சொம்பு 500 பேர் பாரமுள்ளதென்றும், தான் பாக்கி கனத்திற்கிருப்பதாகவும் சொல்லி படகை ஓட்டும்படி ஆக்ஞாபித்தார். அப்படியே அந்த அம்மாள் படகை செலுத்திப் போகும்பொழுது, பராசரர் தனக்கு பிள்ளை உண்டாக அவளுடைய ஸங்கமத்தை அபேக்ஷிக்கவும், மத்ஸ்யகந்தி பகற்காலமானதால் அக்கரையிலுள்ள மகரிஷிகள் காண்பார்களென்று பயப்படவும், பராசரர் மூடுபனியை உடனே உண்டாக்கி இருளும்படி செய்து, அவள் சரீரத்திலுள்ள மீன் நாற்றத்தை மாற்றி நறுமணம் ஒரு யோசனை தூரம் வீசும்படிச் செய்து, அதனால் அவளை யோஜனகந்தியாக்கி, அவளை விதியுக்தமாய் ஸப்தரிஷிகளின் நடுவில் விவாகம் செய்துகொண்டு, அவளுடன் ஸங்கமம் செய்ய, யமுனையின் நடுவாற்றிலுள்ள ஓர் த்வீபத்தில் உடனே ப்ரவேசித்தான். (தொடரும்)

---

மதராஸ் ரிடையர்ட் போலீஸ் சூபரின்டெண்ட் ஸ்ரீமான் ஆரணி சுப்புராவ் அவர்கள் தீவிரமான பொதுஜன ஊழியத்திலிருந்து விசிராந்தி எடுத்துக்கொள்வதை முன்னிட்டு அவர்களுக்குத் தக்க உபசாரணை செய்ய மதராஸ் மாத்வ அஸோஸியேஷன் ஆதரவில் S. M. S. O. கிருஹாவில் 5—5—39ல் அன்று மாலை 5-30 மணிக்கு ஸ்ரீமான் J. வாஸுதேவ ராவ் அக்கிராஸனத்தின்கீழ் ஓர் பெருங்கூட்டம் கூடியதென்றும் அச்சமயம் ஸ்ரீமான்களான பண்டிட் வய்யூர் ஸ்ரீனிவாஸாசாரியார் ராவ்பகதூர் S.K. ஹனுமந்தராவ் முதலியோர் அக்கிராஸனாதிபதி வெகுவாய் ஸ்ரீமான் ராயரவர்களின் குணாதிசயங்களைப்பற்றி வெகுவாய் பேசினரென்றும் ஸ்ரீமான் ராயரவர்களும் ருசிகரமாய் பதில் சொல்லி தான் மதராஸ் விட்டு சொற்பகாலம்தான் வெளியிலிருப்பதாய் அறிவித்தாரென்றும் இந்த அஸோஸியேஷனுடைய நடவடிக்கைகளை விருத்திசெய்ய மாத்வர்கள் ஏராளமாய் சேர்ந்து அதிக சிரத்தையுடன் உழைக்கவேண்டுமென்றும் ஷெ சங்கத்தின் காரியதரிசி ஸ்ரீமான் ராகவேந்திரராயரவர்கள் எல்லோருக்கும் வந்தனமளிக்க சந்தன தாம்பூலாதிகள் வழங்கி மீட்டிங்கு முடிவடைந்ததென்று அறிவிக்கப்படுகிறது.

## மாத்வமித்திரன்.

மாத்வர்களின் சாஸ்திரீயமான தமிழ் பத்திரிகை இது ஒன்றே. ஸ்ரீமத்வமதத்தின் அரிய இரகசியங்கள் ஸம்பிரதாயங்கள் மாஸமாகாத்மியங்கள் புராணசரிதைகள் மாத்வவகுப்பு புண்ய புருஷர்களின் சரித்திரங்கள் வேதாந்த சர்ச்சைகள் தர்மசாஸ்திர விசாரங்கள் தினசரி விரதாதி குறிப்பு:— மகாபாரத தாத்பர்ய நிர்ணயம் முதலான அநேக கிரந்தங்களின் மொழி பெயர்ப்புகள் முதலிய எண்ணிறைந்த விஷயங்கள் நிறைந்திருக்கின்றன. ஸ்ரீமத்வமதத்தை சுலபமாய் அறிந்துகொள்ள இப்பத்திரிகைக்கே உடனே சந்தாதாரராய்ச் சேருங்கள். இது பிரதி பௌர்ணமியிலும் கும்பகோணத்திலிருந்து வெளியாகிறது. இதற்கு வருடசந்தா முன்பணமாய் ரூபாய் மூன்று. பிரதி சிராவணமாதமும் இப்பத்திரிகைக்கு வருட ஆரம்பமாகும். எந்த மாதத்தில் சந்தாதாரராய்ச் சேர்ந்தாலும் அந்த வருஷத்திய பிந்திய சஞ்சிகைகள் அனுப்பப்படும். பழைய வாலியங்கள் விலைக்குக் கிடைக்கும். பத்திரிகை சரியானபடி கிடைக்காவிட்டால் பௌர்ணமி கழிந்த ஒருவாரத்துக்குள் நமக்கு அறிவிக்கவேண்டியதுடன் அந்தந்த தபாலாபீசுக்கும் அறிவித்துவிடவேண்டும். பதிலறிய விரும்புகிறவர்கள் ஸ்டாம்பை அனுப்பவேண்டும். ஒவ்வொரு கடிதத்திலும் தெளிவாய் புரா மேல் விலாசமும் எழுதி அனுப்ப வேண்டும்.

மானேஜர் மாத்வமித்திரன், ஸ்ரீவியாஸவிலாஸம், கும்பகோணம்.

---

# SRI RAGHU VILAS, MADURA.

A fully equipped Hotel famous for its cleanliness, Superiority and palatial surroundings noted for its up-to-date Varieties with first-rate preparations.

***R. Bindumathava Rao, Proprietor.***

## ஸ்ரீ ரகுவிலாஸ் காப்பி ஹோட்டல்,

20 டவுன்ஹால் ரோடு, மதுரை,

R. ரகூத்தமராவ் மானேஜர்

---

## கக்குவான் இருமல்.

இதை 12 நாளிலேயே குணப்படுத்துவதான டாக்டர் பெரியாராவின் ஹூபிங் காப் ஸ்பெஷிபிக் இருக்கையில் 3மாதாலம் உங்கள் குழந்தை வருந்தும்படி விடாதீர்கள். ஓர் பாட்டில் ரூ 2—12—0

**ஆஸ்த்மா க்யூர்** இதரமருந்துகள் உபயோகமில்லாமற் போகுமாகில் காசத்திற்கு இதுதான் கைகண்ட மருந்து. ஓர்பாட்டில் ரூ 4—8—0

**ஆண்டிடயாபிடின்** இது நீரழிவை நிச்சயமாய் 6மாதத்திற்குள் சொஸ்தப்படுத்தும். ஓர்டின் ரூ 4—12—0

ஆர்டருடன் ரூ 2-ஐ மணியார்டராகவோ ஸ்டாம்பாகவோ அனுப்பவும்

PEREIRA & Co., Chemists No.13, Calicut. (S. India)

# டி. எஸ். ஆர்.
## அண்டு
# கம்பெனி,
## கும்பகோணம்.

ஸ்தாபிதம் 1909 | தந்திவிலாஸம் "கோகுல்"

எங்கள் வாஸனாதிரவியசாலையில்
தயாரித்து விற்பனைக்குதயாராக
இருக்கும் ஸாமான்களின் விபரம்

| | |
|---|---|
| வாஸனைப்பாக்கு | பலகாய்கறி ஊர்காய்கள் |
| வாஸனைச்சுண்ணாம்பு | ரோஜாப்பூ குல்கந்து |
| வாஸனைப் புகையிலை | ஷர்பத் தினுசுகள் |
| ஸ்னானப்பவுடர் | கொப்பரைச்சீவல் |
| கேஸர் பவுடர் | கோகுல் கூந்தல் |
| அம்பர், அரகஜா | பற்பொடி [தைலம் |
| தசாங்கம் | ஊதுவத்திகள் |

ச ந் த னா தி த் தை ல ம்

அரைக்கீரைவிதைத் தைலம்.

மற்றும் அநேகவாஸனை சாமான்களும் கிடைக்கும்.

கேட்லாக்குக்கு எழுதுங்கள்

Printed at Sri Venkateswar Printing Works and
Published by Bhagavatha Ranganathachariar, Kumbakonam.